885

குமரி மலர்

பதிப்பாசிரியர்

ஏ. கே. செட்டியார்

50 காசு

கடவுள் ஒருவரே என்று நான் நம்புகிறேன். அதனால் மனித சமூகம் முழுவதுமே ஒன்றுதான் என்று நான் கருதுகிறேன்.

—காந்தியடிகள்

கோயமுத்தூர் முருகன் மில்ஸ் லிமிடெட்

மேட்டுப்பாளையம் ரோடு

கோயமுத்தூர்

பொரபுதூரிலுள்ள தியான புத்தர்.

எம். கே. கிருஷ்ண செட்டியார்

அசோகா பாக்டரி :: கோயமுத்தூர்.

ANNOUNCEMENT.



"TEXTOOL"

TAKES PRIDE TO ANNOUNCE THAT THEIR 4 CYLINDER 36 To 86 H. P. AUTOMOTIVE DIESEL ENGINES

will be out in the market Soon!!

Await Further News !!!

MANUFACTURERS:-

Textool Company Limited,

Post Box No. 221,

COIMBATORE.

Phone: 409 1409

Gram: 'TEXTOLCO'



VUMMIDI
RAMIAH CHETTY
GURUSWAMY CHETTY & CO.
JEWELLERS
23-25, CHINA BAZAAR ROAD
MADRAS

Branch :

L. I. C. BUILDING
Mount Road, : MADRAS-2

மலர் 16 இதழ் 10

விகாரி—தை

உள்ளுறை

		பக்கம்
1.	எது சன்மார்க்கம்? —காந்தியடிகள்	1
2.	பிரார்த்தனையின் சக்தி —ராஜாஜி	5
3.	வேளாண்மையின் பயன்	7
4.	கொய்த மலர்கள்	13
5.	இந்தியாவுக்கு ஏற்ற ஆட்சி முறை —மேகர் சந்திர மகாஜன்	25
6.	காற்றாடி யந்திரம்	43
7.	கப ஜுரத்திற்கு மருந்து	46
8.	மக்களாட்சியும் தொழிலாளர் இயக்கமும்	48
9.	அமெரிக்கப் பெண்கள்	60
10.	பால் கெடாது காக்க	62
11.	நிஸின்	64
12.	எனது மனம் —பங்கிம் சந்திரர்	66
13.	உலகத்தின் தென்கோடி	72
14.	குருடர்களுக்கான கண்கள்	75
15.	அழகு —நிலக்கோட்டை சங்கரசுப்பு	79

எது சன்மார்க்கம்?

காந்தியடிகள்

ஒரு செயல் சன்மார்க்கத்துக்கு உகந்ததா அல்லவா என்பதை நிர்ணயிப்பது எப்படி? சன்மார்க்கத்துக்கு முற்றும் விரோதமான செயல்கள் எவ்வளவோ இருக்கின்றன. அவற்றைப் பற்றி நாம் இங்கே பேசவில்லை. சன்மார்க்கத்துக்கு விரோதமில்லாத குற்றமற்ற வேறு பல காரியங்கள் இருக்கின்றன. அத்தகைய காரியங்களைச் சன்மார்க்கச் செயல்கள் என்று சிலர் கருதுகிறார்கள். அக்கருத்து தவறானது. சாதாரணமாக நம் வாழ்க்கையில் நாம் செய்யும் பல காரியங்களைச் சன்மார்க்கத்துக்கு உகந்தவை என்று சொல்ல முடியாது. அவற்றை நாம் சம்பிரதாயத்தை அனுசரித்துப் பழமையான வழக்கம் என்னும் காரணத்தினால் செய்து வருகிறோமே யல்லாது வேறில்லை. பல காரியங்களில் பழைய வழக்கத்தை அனுசரித்தலும் அவசியந்தான். அவ்வாறு செய்யாவிடில் உலகில் குழப்பம் உண்டாகி எல்லாக் காரியங்களும் தடைப்பட்டுவிடும். ஆனால் இவ்வாறு வழக்கத்தை அனுசரித்து நடத்தலையே சன்மார்க்க வாழ்வு என்று சொல்ல முடியாது.

நாம் எண்ணித் துணிந்து செய்யும் கருமங்களையே சன்மார்க்கச் செயல்கள் என்று கூற வேண்டும். யந்திரத்தைப் போல் நாம் செய்யும் காரியங்களில் சன்மார்க்கம் என்ற பேச்சுக்கே இடமில்லை. மனிதன் தன் கடமையைச் செய்தேயாக வேண்டும் என்ற அளவில் அவன் யந்திரம் போல் குருட்டுத்தனமாக வேலை செய்வதற்கும், விவேகத்

துடன் ஆராய்ந்து யந்திரம் போல் கடனாற்றுவதற்கும் வித்தியாசம் உண்டு. அரசன் ஒருவன் ஒரு குற்றவாளியை மன்னித்தானாயின் அவன் செயல் போற்றுதற்கு உரியதாயிருக்கலாம். ஆனால் அவனது மன்னிப்பு உத்தரவை எடுத்துக் கொண்டு போகும் வேலையாள் அரசனால் ஏவப் படும் ஒரு யந்திரமே ஆவான். அந்த வேலையாளும் கூட அந்த உத்தரவைக் கொண்டு செல்லுதல் தன் கடமை என்பதை உணர்ந்து செய்வானானால், அவனுடைய வேலையும் சன்மார்க்கச் செயலேயாகின்றது.

எந்த மனிதன் தன் விவேகத்தையும் புத்தியையும் உபயோகப் படுத்தாமல், ஆற்று வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போகப்படும் துரும்பு போல் உலகம் போகும் வழியே தானும் போய்க் கொண்டிருக்கிறானோ, அவன் நீதி நெறி இது என்பதாக எவ்வாறு அறியக்கூடும்? இவ்வுலகில் அவ்வப்போது தோன்றும் ஒரு சிலர் பரோபகார நோக்கங் கொண்டு உலகப் போக்குக்கும், பழைய வழக்கத்துக்கும் மாறாகக் காரியம் செய்கிறார்கள். அத்தகையோர் உலகின் வீர புருஷர்கள் ஆவார்கள்.

இத்தகைய வீர புருஷர்களில் ஒருவர், "நீங்கள் ஆழ்ந்து யோசனை செய்து உங்கள் சொந்தக் கருத்துக்களை வெளியிடக் கற்றுக் கொள்ளாத வரையில், என்னைப் பற்றி எத்தகைய அபிப்பிராயம் கொண்டிருந்தாலும் எனக்குச் சிறிதும் கவலை இல்லை" என்று ஒருமுறை கூறினார்.

அதுபோலவே, நாம் அனைவரும் நம் அந்தராத்மா என்ன சொல்லுகிறதென்பதைச் செவி கொடுத்துக் கேட்டு அதற்கு இணங்க நடந்தாலன்றி நீதி மார்க்கத்தைக் கடைப் பிடித்தவர்களாக மாட்டோம். ஆனால் இந்த நிலையை நாம் எவ்வாறு அடைய முடியும்? எங்கும் நிறைந்த ஈசன் நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்துக்கும்

சாட்சியாக இருக்கிருன் என்னும் உணர்ச்சி நம் உள்ளத்தில் வேர் ஊன்றும் வரையில், நாம் மேற்கூறிய நிலை எய்த முடியாது.

மேலும், ஒரு காரியம் சன்மார்க்கத்துக்கு உகந்ததா என்பதை ஆராயும்போது, அது தன்னளவில் நல்ல காரியமா என்பதை மட்டும் கவனித்தால் போதாது. அது நல்ல நோக்கத்துடன் செய்யப் பெற்றதா என்பதையும் கவனிக்க வேண்டும். ஒரு காரியம் நீதி தர்மத்துக்குப் பொருந்தியதா அல்லவா என்பது, காரியம் செய்தவனின் நோக்கத்தையே பெரிதும் பொறுத்ததாகும்.

இரண்டு பேர் ஒரே காரியத்தைச் செய்வதாக வைத்துக் கொள்வோம். இவர்களில் ஒருவனுடைய காரியம் சன்மார்க்கத்துக்கு உகந்ததாயும், மற்ருெருவனுடைய செயல் அதற்கு மாருனதாகவும் இருக்கலாம். உதாரணமாக, ஒருவன் ஏழைகளிடம் மிக்க கருணை கொண்டு அவர்களுக்கு அன்னம் இடுகிருன். மற்ருெருவன் பெயர் பெறுவதற்காகவோ அல்லது இதுபோன்ற வேறு சுயநல நோக்கங் கொண்டோ ஏழைகளுக்கு அன்னம் இடுகிருன். இவ்விருவருடைய செயல்களும் ஒன்றே எனினும், முந்தியவனுடைய செயல்தான் நீதி தர்மத்துக்குப் பொருந்தியதாகும். பிந்தியவன் செயல் சன்மார்க்கம் ஆகாது.

மற்ருெரு விஷயம் கவனிக்க வேண்டும். சன்மார்க்கச் செயல்களினுல் ஏற்படும் நற்பயன்கள் எப்போதும் நம் கண்களுக்குப் புலனுவதில்லை. ஆனுல் சன்மார்க்கத் துறையில் செல்ல விரும்பும் ஒருவன் தன் காரியங்களின் பயன்களைக் குறித்துச் சிந்தனை செய்தல் கூடாது, ஒவ்வொரு காரியத்தையும் செய்யப் புகும்போது, அது நற்காரியமா? அதைச் செய்வதில் நம் நோக்கம் பரிசுத்தமானதா என்னும் இரு விஷயங்களை மட்டுமே கவனிக்க வேண்டும். காரியங்களின் பலன்கள் மீது நமக்கு எவ்வித அதிகார

மும் இல்லை. அந்த அதிகாரம் ஆண்டவன் ஒருவனுக்கே உண்டு.

மேற்கூறியவற்றிலிருந்து மற்றோர் உண்மை புலனுகிறது. ஒரு காரியத்தைச் சன்மார்க்கத்திற்கு உகந்தது என்று சொல்லுவதற்கு, அது தன்னில் நற்செயலாய் இருந்தால் மட்டும் போதாது; நல்ல நோக்கத்துடன் செய்யப் பெறுவதாயினும் போதாது; அது பிறருடைய வலுக்கட்டாயத்தாலன்றித் தன் இச்சையினுல் செய்யப் பெறுவதாகவும் இருக்க வேண்டும்.

ஒருவன், தான் வேலை செய்யும் காரியாலயத்துக்கு நேரங்கடந்து போனுல் வேலை போய்விடுமே என்ற பயம் காரணமாக அதிகாலையில் எழுந்திருப்பானுனுல், அதில் சிறப்பு ஒன்றும் கிடையாது. அவ்வாறே கையில் காசில்லாத காரணத்தால், நான் ஆடம்பரமற்ற எளிய வாழ்வு நடத்துவேனுயின், அது சன்மார்க்க வாழ்வு ஆகமாட்டாது. அவ்வாறின்றி, நான் பணக்காரனுக இருந்தும் என்னைச் சுற்றிலுமுள்ள மக்கள் வறுமையினுலும் துன்பத்தாலும் வாடுவது கண்டு இரங்கி, அவர்களுக்கு இல்லாத போக போக்கியங்களை நான் எப்படி அனுபவிக்கலாம் என்னும் உயர்நோக்கம் கொண்டு எளிய வாழ்க்கை நடத்துவேனுயின், அதுவே சுத்த சன்மார்க்க வாழ்வாகும்.

அது போலவே, வேலைக்காரன் ஓடிப் போய் விடுவானே என்ற பயம் காரணமாக அவனை அன்பாக நடத்துவதும், சம்பளம் சரிவரக் கொடுப்பதும் அல்லது சம்பளத்தை அதிகப்படுத்துவதும் சுயநலமே யல்லாது வேறல்ல. இவ்வாறின்றி, உண்மையாகவே வேலைக்காரனிடம் அன்பு கொண்டு, என் வருமானத்தில் அவனுக்கும் ஒரு பங்கு கொடுத்தல் என் கடமையாகும் என்று கருதிச் செய்தால், அது உத்தம சன்மார்க்கச் செயல் ஆகும்.

பிரார்த்தனையின் சக்தி

ராஜாஜி

உலகப்படத்தில் இந்தியாவின் ஸ்தானத்தை நிலை நாட்டும் உண்மையான வேலை இப்பொழுதுதான் ஆரம்பமாகி இருக்கிறது. இந்தியாவின் ஜாதகம் சிறந்தது; அதிர்ஷ்டமிக்கது. இது உலகத்திலேயே உயர்ந்த மகானை காந்தியடிகளைத் தோற்றுவித்தது. இவ்விதமாகக் கடவுளின் கருணையை மிகுதியாய்ப் பெற்ற நம் நாட்டில் எதிர்காலமும் ஒளியுடையதாகத்தான் நிச்சயம் இருக்கும். இன்று இந்தியாவின் எதிர்காலம் உண்மையில் ஆண்டவனிடமே இருக்கிறது.

முன்பு என்றும் கண்டிராத பயங்கரமான ஆபத்தை எதிர்நோக்கி நிற்கிறது இன்றைய உலகம். வானத்துப் பொருள் ஏதாவது பூமியில் வந்து மோதிப் பொடியாகி விட்டால், உலகத்தில் இன்றுள்ள கஷ்டங்கள் எல்லாமே நீங்கிவிடும் என்று ஒரு சமயம் ஓர் ஆங்கிலேய அறிஞர் கூறினார். ஹைட்ரஜன், அணுக்குண்டுகளை உற்பத்தி செய்து கொண்டதன் மூலமாக, உலகம் தன் அழிவைத் தானே தேடிக்கொள்ளப் போகிறது போலத் தோன்றுகிறது.

ஒரு சிறிய சூரியனின் சக்தியைப் போன்றது ஹைட்ரஜன் குண்டு. ஓலை வேய்ந்த உலகத்தின் கூரைமேல், இப்பொழுது இரண்டு குரங்குகள் கொழுந்து விட்டெறியும் இரு தீப்பந்தங்களை ஏந்திக் கொண்டிருக்கின்றன. அவை இரண்டும் குரங்குகள் என்பதிலும் சந்தேகம் இல்லை. அவற்றின் கையில் உள்ளவை எரியும் தீப்பந்தங்

கள் என்பதிலும் சந்தேகம் இல்லை. அவை ஏறியுள்ள வீட்டுக் கூரையும் ஓலை வேய்ந்தது என்பதில் சந்தேகம் சிறிதும் இல்லை.

சமீபத்தில் உலகம் வெடிக்கக் கூடிய நிலை ஏற்பட்டு விட்டது. எனவே இந்தியா இந்த இரண்டு குரங்குகள் எதனுடனும் சம்பந்தம் வைத்துக் கொள்ளாமல் கவனமாக இருக்கிறது. இரண்டு குரங்குகளில் ஒன்று ஏதாவது சிறிய விஷமம் செய்தாலும் உடனே வீடு நெருப்புப்பற்றி கொள்ளும். இவ்விதம் நிகழாமல் முன்னெச்சரிக்கையாகத் தீப்பந்தங்களின் நெருப்பை அணைத்துவிடவேண்டும். அப்பொழுதுதான் வீட்டைக் காப்பாற்ற முடியும்.

தாகம் உள்ள மனிதன் தண்ணீரைப் தேடிப் போவான். அதைப்போலவே நாமும் ஆண்டவனிடம் சென்று, "குரங்குகள் அந்தப் தீப்பந்தங்களை அப்புறத்தில் வைத்துவிடவேண்டும், தீப்பந்தங்களையும் அணைத்துவிடவேண்டும்" என்று வேண்டிக் கொள்ள வேண்டும்.

உலகம் செய்து முடித்துவிடும் காரியங்களைவிட அதிகமாகப் பிரார்த்தனையின் மூலம் நிறைவேற்றிக் கொள்ள முடியும். நமக்கு இந்த வழியைக் காந்தியடிகள் காட்டியிருக்கிறார். அர்த்தம் புரியாத எந்த மந்திரங்களையும் அவர் உபயோகிக்கவில்லை. அவருடைய எளிய "ஹரே ராம்" என்ற சொல்லே துயரத்துக்கு நடுவே ஆறுதலையும் மனமாறுதலையும் தருகிறது.

காணமுடியாத அந்த ஒரு சக்தியிடத்தில் நாமும் காந்தியடிகளைப் போலவே ஆழ்ந்த நம்பிக்கை வைத்து அவர் வழியைப் பின்பற்ற வேண்டும்.

வேளாண்மையின் பயன்

(புது டில்லியில் உலக வேளாண்மை விழாவில் அமெரிக்கக் கண்காட்சியைத் திறந்து வைத்தபோது ஜனாதிபதி ஐஸன்ஹோவர் நிகழ்த்திய உரை)

அமெரிக்கர்களாகிய நாங்கள் எங்கள் நாட்டின் வளத்தை எவ்வாறு பயன்படுத்திக் கொண்டுள்ளோம்? எங்கள் மக்கள் தாம் நன்ருக வாழ்வதுடன் மற்றவர்களுக்கு உதவவும் போதுமான உணவு உற்பத்தி செய்வதெப்படி? என்று பார்வையாளர்கள் அனைவரும் இக்கண்காட்சியில் காணமுடியும். ஆக்கப்பணியில் மக்களிடையே ஆன்மீக ஒற்றுமை, வளமுள்ள நிலம், புதுமை காணும் விஞ்ஞானம் ஆகியதுறைகளில் நாங்கள் சாதித்துள்ளவை குறித்துப் பெருமிதம் கொள்கிருேம்; இது இயற்கையே. ஆனல் அதற்கப்புறம், மக்கள் அனைவருக்கும் சிறந்த வாழ்வு தரும் பெரும் பயனுள்ள கருவியாக இன்றைய வேளாண்மை விளங்குவதை நாங்கள் அறிவோம்.

தனிப்பட்ட முறையில் மிக்க அக்கறையுடன் நான் இந்த விழாவுக்கு வந்துள்ளேன். சிறுவனுகவும் இளைஞனுகவும் அமெரிக்க வேளாண்மைப் பண்ணையின் மத்தியில் நான் வளர்ந்தேன். நான் வேலைபார்த்த காலத்தில் நெடு நாளாக மீண்டும் பண்ணைக்குத் திரும்ப வேண்டுமென்ற அவா என்னிடம் தோன்றியதுண்டு; இதை ஒருபோதுமே நான் அவ்வளவாக மறைத்தது கிடையாது. என்னுடைய இப்போதைய வேலை முடிவடைந்ததும் குடியானவனுக நான் திட்டமிட்டுள்ளேன். எனவே இந்த விழாவில்சிறிது நேரம் செலவிடுவதில் எனக்குப் பெரும் அக்கறையுண்டு.

இவ்விழாவில் எத்தனையோ நாடுகள் விவசாய முறைகளிலும், வழிகளிலும் தம் சாதனைகளைக் காட்டியுள்ளன. எனக்குப் புதிதான எவ்வளவோ விஷயங்களை நான் இங்கு பார்ப்பேன்.

நீதியும் அமைதியும் நிறைந்த ஒரு உலகில் சிறந்த வாழ்வு வாழ உணவு எவ்வாறு உதவ முடியும் என்று நான் இப்போது சில கருத்துக்கள் தெரிவிப்பேன்; இதை நீங்கள் பொறுத்துக் கொள்வீர்கள் என நம்புகிறேன்.

பசிப் பிணி குழந்தைகளின் உடல்வளத்தை உறிஞ்சி விடுவது; பெற்றோர்களுடைய உள்ளத்தை மாசு படுத்துவது; இடையருது உழைத்தும் அற்பமாகச் சம்பாதிப்பவர்களுடைய மனத்தைக்கொதிக்கச் செய்வது; துன்பம் நிறைந்தது; ஈவிரக்கமற்றது. இந்த ஒரு கொடுமையையேனும் உலகத்திலிருந்து அறவே அழித்தொழிக்க வல்ல விஞ்ஞான ஆற்றல் இன்று நமக்கு இருக்கிறது.

உலகமெங்கும் பசிப் பிணியை எதிர்த்துப்போராடும் போர்தான் மனிதருக்கு மாண்பும் மதிப்பும் கொடுப்பதாகும். இத்தகைய போரில் இறங்கி வெற்றி கொள்வதற்கு வேண்டிய அறிவும் வசதியும் இன்றைக்கே நமக்கு இருக்கின்றன. இதை இங்குள்ள காட்சிகள் நிரூபித்துக் காட்டும்.

அமெரிக்கக் கண்காட்சியின் இலட்சியமே அத்தகைய உண்மையான உயர்வளிக்கும் போரில் சேருமாறு கூவி அழைக்கும் அழைப்பாகும்.

'உணவு—குடும்பம்—நட்பு—சுதந்திரம்' இதுதான் அந்த இலட்சியம்.

அன்றாடத் தேவைகள். உயரியநோக்கங்கள், ஆழ்ந்த உணர்வுகள், தொன்மையான ஆவல்கள் அனைத்தும் இந்த நான்கு சொற்களில் அடங்கியிருக்கின்றன. மனித

மாண்பு என்னும் ஓரே கொடியின் கீழ் இந்தியரையும் அமெரிக்கரையும் ஒரு சேர இணைப்பவை அவையே.

இந்த நான்கு சொற்களும் ஆயுதங்களையும் குண்டுகளையும் விட வலிமை மிக்கவை; இயந்திரங்களையும் பணத்தையும் விட வலிமை மிக்கவை ; கடந்தகாலத்தில் ஆட்சி செலுத்திய சாம்ராஜ்யங்கள், எதிர்காலத்தில் ஆட்சி செலுத்தப் போவதாகப் பயமுறுத்தும் சாம்ராஜ்யங்கள் எவற்றையும் விட வலிமை மிக்கவை.

இந்த நான்கு சொற்களும் மக்களை ஓர் உயரிய நிலைக்கு உயர்த்தி, பரஸ்பர முயற்சியில், தளராத முயற்சியில், மக்கள் குலத்துக்குக் கிடைக்கக் கூடிய மிக்க பலன் நிறைந்த முயற்சியில் ஈடுபடுமாறுசெய்ய வல்லவை.

உணவு:—நமது உடம்பு எத்தகைய வேலையையும், கடமையையும், பணியையும் செய்வதற்கு ஏற்ற நிலையில் இருக்க வேண்டும் ; பசிப்பிணி அச்சம் நம் மனத்தில் கவிந்து கொள்ளாதபடி இருக்க வேண்டும் ; பஞ்சக் கொடுமையால் பஞ்சடையாமல் நமது கண்கள் புதுப் புதுத் துறைகளைக் காணவேண்டும் ; நம்முடைய ஆவல்களும் அவை நிறைவேறுவதற்கான திட்டங்களும் பயிர் விளையாமையினாலும் பருவநிலைக் கோளாறுகளினாலும் வீணாகிவிடக்கூடாது.

குடும்பம் :—நமது இல்லங்களில் கண்ணியமான வாழ்க்கையும் சிறந்த நம்பிக்கையும் இருக்கவேண்டும். அமைதி காலத்து அல்லல்களுக்கும், யுத்த காலத்துத் திடீர் மரணத்துக்கும் குழந்தைகள் இனிமேல் ஆளாகாமல் இருக்க வேண்டும். தவிர்க்க முடியாத அல்லது தீர்க்க முடியாத வறுமையினாலோ வருத்தத்தினாலோ அவர்களுடைய பெற்றோர்கள் மனம் உடைந்து போகாதிருக்க வேண்டும்.

நட்பு :— இந்தப் பூமியில் வாழும் எல்லா மக்களிடையேயும், அறியாமை என்ற இருளும், அச்சமும், அவநம்பிக்கையும், அறிவு, நல்லுணர்வு என்ற ஒளியிலே மறைந்தொழிய வேண்டும். நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து நமது பரஸ்பர நன்மைக்காக கூடிவாழும் காலம் வந்துவிட்டது. இல்லையேல் நாம் அனைவரும் மிகக் கொடூரமான தண்டனையை அனுபவிக்க நேரிடும் ; இதுவே இறுதியான தண்டனையாக இருக்கலாம்.

சுதந்திரம் :—இந்தப் புவியின் எல்லாக் கண்டங்களிலும், தீவுகளிலும் இருக்கும் நல்லெண்ணம், நல்வாழ்க்கை படைத்த ஒவ்வொரு ஆணும் பெண்ணும், மனித கண்ணியத்திற்கும் உகந்த முறையிலே, "நான் சுதந்திரம் உள்ளவன் ; மற்றவர்களால் பிறப்பின் காரணமாகவோ சூழ்நிலையின் காரணமாகவோ திணிக்கப்பட்ட எத்தகைய கொடுங்கோன்மைக்கும் அடிமையல்லன்" என்று மிகப் பெருமையுடன் மார்தட்டிக் கூறிக் கொள்ள வேண்டும்.

பஞ்சம், போர் முதலிய அச்சமின்றி, சுதந்திரத்தில் எல்லா நாடுகளுடைய குடும்பங்களும் வாழக்கூடியதான ஆரோக்கியம் செறிந்த, பயன்மிக்க, அமைதி நிறைந்த உலகை உருவாக்குவதில் வேளாண்மைக்குரிய பங்கு, எங்களுடைய கருத்துப்படி, எத்தகையது என்பதை இந்த விழாவில் அமெரிக்கக் கண்காட்சி விளம்புகிறது.

அமெரிக்க வேளாண்மை வேறு எந்த நாட்டு வேளாண்மையையும் விடச் சிறந்தது என்று காட்டும் முயற்சி அல்ல இந்தக் கண்காட்சி. இந்த நோக்கம் அறவே இல்லை. மக்கள் தங்கள் சொந்த நிலங்களில் பல நூற்றுண்டுகளாக மண்ணோடும், நீரோடைகளோடும், தட்ப வெட்ப நிலைகளோடும் சூழ்நிலைகளோடும் ஒன்றி வாழ்ந்து, தங்களுக்கு வாய்த்த சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப

மாறுதல்களையும் புதுமைகளையும் செய்து கொள்ளக் கற்றுக் கொண்டுள்ளனர்.

இங்கு நாங்கள் காட்டுவது என்னவென்றால், அமெரிக்க விவசாயிகள் தங்களுடைய உற்பத்தி திறன், தங்கள் பண்ணைகளின் வளம், தங்கள் கால்நடைகளின் வலு, மதிப்பு ஆகியவற்றைப் பல மடங்கு விருத்தி செய்து கொள்ள உதவிய முறைகளையேயாகும்.

தொழில் நுட்பங்களையும், பழைய முறைகளின் மாற்றங்களையும் புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்டவை அமெரிக்க மக்களின் குறிப்பிட்ட தேவைகளுக்கு எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் இந்தக் கண்காட்சிக்கு வருவோர் பார்க்கலாம். உங்கள் தேவைக்கும் நிலைமைக்கும் தகுந்தவாறு நீங்கள் அவற்றைமாற்றிப் பயன்படுத்தினால், அவை உங்களுக்கு நன்மை பயக்கும் என்பது எங்கள் நம்பிக்கை.

அம்முறைகளால் எந்த நாட்டிலும் திடீரென அற்புதங்கள் நிகழ்ந்துவிடமாட்டா என்பது உண்மையே. ஆயினும் அவற்றைப் பயன்படுத்துவோர் ஒவ்வொரு அறுவடையின் போதும் அதிகம் விளைவிக்கவும், நம்பத்தக்க ஒரு தன்னிறைவை அடையவும் அவை உதவக் கூடும்.

சமாதானத்தையும் உலகமெங்குமுள்ள சுதந்திர மக்களின் நல்வாழ்வையும் கருதி, உபரியாகப் பொருள் உற்பத்தி செய்யும் மற்ற நாடுகளோடு சேர்ந்து, உபரிப் பொருள்களை மற்ற நாடுகளுக்குப் பயன்படுத்துவதுபற்றி ஆராய இந்த ஆண்டுத் தொடக்கத்தில் ஒரு திட்டத்தை நான் தொடங்கி வைத்தேன். உணவைக் கொண்டு அமைதியை வளர்க்க வேண்டும் என்று இதைச் சுருங்கச் சொல்லலாம்.

இந்தத் திட்டத்துக்கு இணங்க என் அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் ஒத்துழைக்கின்றன.

சமாதானத்துக்காகப் பாடுபடும் சகோதரக் குடியரசாகிய இந்தியாவுக்கு வலிமை வழங்குவனவெல்லாம் எங்கள் நாட்டுக்கும் வலிமை வழங்குவனயேயாகும் என்பது என் மக்களின் நம்பிக்கை. 40 கோடி மக்கள் கொண்ட இந்தப் பெரிய நாடு—பண்பாட்டிலும் வரலாற்றிலும் சிறப்பு மிக்க நாடு; சுதந்திரமாகவும் வலிமையுடனும் விளங்க உறுதி பூண்டுள்ள தீரம் மிக்க நாடு—உலகில் நிலையான, நீதியுடன் கூடிய சமாதானம் ஏற்படுவதற்கு மாபெரும் ஆற்றல் வாய்ந்துள்ளது.

இந்தியாவைப் போன்ற தீரமும், உறுதியும்படைத்த எந்த நாட்டைப் பற்றியும் இவ்வாறு சொல்லலாம்.

பசிப்பிணி இல்லாத உலகம் தோன்ற நாம் அந்நாடுகளோடு ஒத்துழைப்போம். அவ்வுலகில் குடும்பங்கள் நிறைவும் செழிப்பும் மிக்க நல்வாழ்வு பெறும்; நாடுகளுக்கு இடையே அச்சமும் ஐயமும் அகன்று நட்பு மலரும்; இன்ப வாழ்வு பெற மக்களுக்குச் சுதந்திரம் இருக்கும்.

கொய்த மலர்கள்

பிரார்த்தனை

நின்னையே தான்வேண்டி நீள்செல்வம் வேண்டாதான்
தன்னையே தான்வேண்டும் செல்வம்போல், மாயத்தால்
மின்னையே சேர்திகிரி வித்துவக் கோட்டம்மா!
நின்னையே தான்வேண்டி நிற்பன் அடியேனே.

—பெருமாள் திருமொழி

மேலோர் இயல்பு

ஒருவன் தன் மன வன்மையாலும், புத்தி சாதுரியத்தாலும் பிறருக்கு உபகாரம் புரிவதெனில் கஷ்டங்களையும் சிரமங்களையும் பொறுத்துக் கொண்டுதான் செய்ய வேண்டும். கஷ்டங்களைச் சகிப்பதனல்தான் ஆத்ம லாபம் கைகூடும். தன்னல மறுப்பும், கஷ்டங்களும் புத்தியால் உழைப்பவர்க்கு இயல்பாயிருத்தல் வேண்டும். பிறர் நலனுக்காகத் தாங்கள் பாடுபடுவதே அவர்களுடைய நோக்கமாயிருத்தல் வேண்டும். புத்தியால் உழைப்பவன் மலையுச்சி மீது உட்கார்ந்து கொள்ள மாட்டான்.

—டால்ஸ்டாய்

தொண்டன்

தொண்டு செய்கிறேம் என்று தானே பெருமையாகப் பேசிக்கொள்வது தொண்டனுக்கு இழுக்கே தரும். மௌனமாகத் தொண்டாற்றுவதே தொண்டனின் லட்சணம்.

—காந்தியடிகள்

உள்ளத்தின் கற்பு

ஐயோ, மனிதர்கள் சொர்க்க மயமான தங்கள் மனத்தில் குப்பைகளேயும் கூளங்களேயும் கொண்டுபோய் நிறைத்துக் கொண்டிருக்கிருர்களே! உடம்பின் கற்பைக் காக்க வேண்டியது போலவே, உள்ளத்தின் கற்பையும் காக்க வேண்டும் என்று அறியாமல் திகைக்கிருர்களே!

வாழ்வில் பெரும் பகுதியை வாழ்வுக்கான பொருள்களைத் தேடுவதிலேயே கழிப்பவனைப் போல், வாழ்வைப் பாழாக்குபவன் வேறு யாரும் இல்லை.

—தோரோ

முயற்சி

ஒவ்வொன்றும் ஆண்டவனுடைய ஆணையால்தான் நடக்கிறது. இதில் சந்தேகமில்லை. ஆனுலும் மனிதனுக்கு முயற்சி அவசியம்; ஆண்டவன் தமது ஆணையை மனிதனது செயல்கள் மூலமாகவே வெளிப்படுத்துகிருர். மேலும், வாழ்க்கையில் ஒருவருக்குக் கிடைக்கும் வசதிகளெல்லாம் அவரது பழைய வினையை (செயல்களை)ப் பொறுத்துள்ளன. ஒருவன் இப்போது செய்யும் முயற்சியினுல் பழைய வினையின் பயனையும் எதிர்த்து விடலாம். ஆதலால் முயற்சியை ஒருவரும் இகழ வேண்டாம்.

—சாரதாமணி தேவி

அநாதைகள்

அநாதையின் பொருள்களை, அவர்கள் வயதையடைந்தபின் குறைவின்றி அவர்களுக்குக் கொடுத்து விடுங்கள். அதிலுள்ள நல்லதுக்குப் பதிலாகக் கெட்டதை மாற்றி விடாதீர்கள். அவர்களுடைய பொருள்களை உங்களுடைய பொருள்களுடன் சேர்த்து விழுங்கி விடாதீர்கள். நிச்சயமாக இது பெரும் பாவமாகும்.

எவர்கள் அநாதைகளின் பொருள்களை அநியாயமாக விழுங்குகிருர்களோ, அவர்கள் தங்கள் வயிற்றில் நிச்சயமாக நெருப்பைக் கட்டிக் கொள்கிருர்கள். பின்னர் மறுமையில் கொழுந்து விட்டெரியும் நெருப்பில் புகுவார்கள்.

அநாதைக் குழந்தைகள் வாலிபத்தை அடையும் வரையில், அவர்களுடைய பொருள்களுக்குப் பாதுகாப்பாளராக இருக்கும் நீங்கள், நியாயமான முறையிலன்றி அவர்களுடைய பொருளை நெருங்காதீர்கள். உங்கள் வாக்குறுதியைப் பரிபூரணமாக நிறைவேற்றுங்கள். ஏனென்ருல் மறுமையில் வாக்குறுதியைப் பற்றி நீங்கள் நிச்சயமாகப் பதில் கூறவேண்டி யிருக்கும்.

—குர் ஆன்

எலியும் முனிவரும்

அடர்ந்த காட்டிலே தியானத்தில் ஆழ்ந்திருந்த முனிவரை ஓர் எலி அணுகி, "முனிவரே, பூனை என்னைத் துரத்துகின்றது. அதற்கு அஞ்சித் தங்களிடம் ஓடி வந்தேன். என்னையும் ஒரு பூனையாக மாற்றி அருள்புரிய வேண்டும்" என்று வேண்டிற்று. அதற்கிசைந்து அம் முனிவரும் தம் தவ வலிமையால் எலியைப் பூனையாக்கினர்.

சிறிது நேரம் கழித்து, அந்தப் பூனை முனிவரிடம் வந்து, "நாயைக் கண்டால் எனக்கு அச்சம் உண்டாகிறது. என்னை நாயாக மாற்றி விடுங்கள்" என்று கேட்டது. முனிவரும் அப்படியே செய்தார்.

மறுபடியும் அந்த நாய் முனிவரை அணுகி, "காட்டிலே ஒரு புலி இருக்கின்றது. அது என்னைக் கொன்று விடுமுன், என்னையும் ஒரு புலியாக்க வேண்டும்" என்றது. முனிவர் நாயைப் புலியாக்கியதும் புலியானது தன் கொடூரமெல்லாம் மேலெழ முனிவரையே கொன்று

தின்றுவிட அவர் மேல் பாயச் சென்றது. அத்தருணத்திலே முனிவர் "எலியாகக் கடவாய்" என்று கட்டளையிட, உடனே புலியும் எலியாகி விட்டது.

பேராசையும் இத்தன்மையதுதான். அதனை முதலிலேயே கிள்ளி எறிய வேண்டும்.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

அன்பும் பயமும்

இப்போது மனிதர் ஒருவருக்கொருவர் பயப்படுவது தான் அதிகம். இதற்கு இதுவரை மனித ஜாதியார் கண்டு பிடித்து அநுசரணையில் வழங்கி வரும் மருந்து இனி உபயோகப்படாது.

பயத்தினால் விரோதம் வளர்கிறது. விரோதத்தால் போர் உண்டாகிறது; மனித ஜாதி வீணாக அழிகிறது. எல்லோருக்குமே நஷ்டம் உண்டாகிறது.

பரஸ்பர பயம் நீங்க வேண்டுமானால், அதற்குப் போர் சரியான மருந்தில்லை. உலகம் தோன்றிய கால முதல் இன்று வரை போர்கள் நடந்துதான் வருகின்றன. இதுவரை மனித ஜாதியிலே ஒருவருக்கொருவர் பயப்படுவது துளிகூடக் குறையவில்லை. அன்பிருந்தால் பயம் தெளிந்து போகும்.

—பாரதியார்

பூத உடல்

வேண்டாம் என்று புறக்கணிக்கும்போது கூட, உடனடியாக விடுவித்துக் கொள்ள முடியாதன சில உள. இந்தப் பூத உடற்கூடு, வாழ்க்கையின் சாபத்தீடு. ஆனால் அதனை நான் பொறுத்துக்கொள்ள வேண்டியதும் பேண வேண்டியதும் எனது நிர்ப்பந்தமான பொறுப்பாகி விட்டன.

—காந்தியடிகள்

ஒரு பிடி உப்பு

ஈரானை ஆண்டு வந்த பாதுஷா நௌஷேர்வான் ஒரு நாள் வேட்டையாடக் காட்டுக்குப் போனார். அங்கே சமையற்காரன், சமையலுக்கு உப்பு இல்லையே என்றான்.

"பக்கத்தில் ஓர் ஊர் இருக்கிறது. அங்கே வாங்கிக் கொண்டு வா; அதற்கு விலை கொடுத்துவிடு; இல்லாவிட்டால் ஊர் முழுவதும் பாழாகி விடும்" என்றார் பாதுஷா.

"அரசே, ஒரு பிடி உப்பு விலையில்லாமல் வாங்குவதனாலே ஊர் முழுவதும் எப்படிப் பாழாகும்?" என்று கேட்டான் சமையற்காரன்.

"பாதுஷா தன் குடிமக்களின் வீட்டில் ஒரு பிடி உப்பு இனமாக வாங்கிக் கொண்டால், மறுநாளே அவருடைய அதிகாரிகள் அந்த ஊர் முழுவதையும் விழுங்கி விடுவார்களே" என்றார் பாதுஷா.

—குலிஸ்தான்

சோம்பல்

சோம்பலை அகற்றுவதற்கு உடல் உழைப்பு அவசியம். சோம்பலை வெல்லுவதற்கு இது ஒன்றே வழி. இதைச் செய்யா விட்டால் இதற்குரிய தண்டனை இயற்கையினிடமிருந்து நமக்குக் கிடைக்காமல் இராது. நோய் நொடிகளின் மூலமாகவும், பிற சிரமங்களாகவும் அது வரும். அந்தத் தண்டனையை அனுபவித்தே தீர வேண்டியிருக்கும்.

—விநோபா பாவே

அவன் செயல்

பூமியிலிருந்து தோன்றிய நீங்கள், உலகின் பல பாகங்களிலும் சென்று உழலக் கூடிய மனிதராக ஆனதும் ஆண்டவனுடைய செயலாகும்.

உங்கள் மனைவிக்கும் உங்களுக்கும் இடையே உறவையும் காதலையும் புகுத்தி, இருவரையும் பிணைத்திருப்பதும் அவன் செயலே.

வானமும் பூமியும் தோன்றி யிருக்கின்றன; மொழிகளும் வர்ணங்களும் மாறுபட்டு இருக்கின்றன; இவையும் அவன் விருப்பப்படியேதான் அமைந்திருக்கின்றன.

இரவில் நீங்கள் நித்திரை செய்து இளைப்பாறுவதும், பகலில் பல இடங்களுக்கும் சென்று அவனுடைய அருளைத் தேடிக் கொள்வதும் அவனுடைய செயலே.

நயமும் பயமும் தரக் கூடியவாறு மின்னலை அவன் தோற்றுவிக்கிறான். மேகத்திலிருந்து மழையைப் பொழிவித்து வறண்ட பூமியைச் செழிக்கச் செய்கிறான்.

நீங்கள் இறந்து மட்கி மடிந்து போன பின்னரும் அவன் உங்களை அழைத்தால், ஒரே நொடியில் நீங்கள் மீண்டும் பிழைத்தெழுவீர்கள்.

படைப்புகளுக்கு மூலகாரணம் அவனே. அவை மறைந்த பின்னர் மீண்டும் அதைத் தோன்றச் செய்பவன் அவனே. இது அவனுக்கு மிக்க எளிது. வானத்திலும் பூமியிலும் அவனுடைய பெருமையே மேலானது. அவன் உயர்ந்தவன்: ஞானி.

—நபிகள் நாயகம்

நம்மாழ்வார் உபதேசம்

இறைவனைத் தவிர்த்த மற்றெல்லா விஷயங்களையும் முற்றிலும் விட்டு, அவனுடைய திருவடிகளில் உங்களுடைய ஆத்மாவைச் சமர்ப்பியுங்கள்; அவ்வாறு உய்வடையுங்கள்.

ஆத்மா அழிவற்றது; நிலையானது; உடலோ மின்னலைக் காட்டிலும் நிலையற்றது. இவ்வாறுள்ள நிலைமையில் பகவானை நினைத்துக் கொண்டே யிருங்கள்.

யான், என்னுடையது என்ற இருவகைப் பற்றுக் களையும் வேரற (வாசனையும் இல்லாதபடி) அழித்து விட்டு, இறைவனைச் சேருங்கள்.

எல்லாச் செல்வங்களும் இறைவனுக்கு உரியன; நாமும் அவனுடைய சொத்துக்கள் என்று நினையுங்கள்.

இறைவனால் தனக்குத் தொண்டு செய்வதற்கெனக் கொடுக்கப் பெற்ற நமது மனம், மொழி, மெய்கள் மூன் றையும் விஷயங்களிலிருந்து திருப்பி அவனிடம் வையுங் கள். அவ்வாறு செய்தால், அவனுடைய தொண்டுகளுக்கு விரோதமான இடையூறுகள் ஒழியும்.

எண்ணிறந்த ஜீவர்களையும், முடிவற்ற கல்யாண குணங்களையும் உடையவனான பகவானுடைய திருவடி களை—அடைந்தாரை நழுவ விடாத திருவடிகளை—அடை யுங்கள்.

சீனப் பழமொழி

துன்பப் பறவைகள் உங்கள் தலைக்கு மேல் வட்ட மிடுவதைத் தவிர்க்க முடியாது; ஆனால் அவை உங்கள் தலையில் கூடு கட்டிக் கொள்ளாமல் கவனித்துக்கொள்ள லாம்.

இறைவன் எங்கே?

உழவன் மண்ணைப் பண்படுத்தும் இடத்திலும், சாலை அமைப்பவன் கற்களைப் பொடித்து இடித்துக் கொண்டிருக்கும் இடத்திலுமே இறைவன் இருக்கிறான். வெயிலிலும் மழையிலும் அவர்களுடன் சேர்ந்தே அவன் நிற்கிறான். அவன் ஆடை முழுவதிலும் புழுதி படிந்திருக் கும். ஆம், அவனைப் போலவே நீயும் எழுந்து, உன் அலங் கார ஆடைகளைக் களைந்துவிட்டு இந்த மண்ணில் இறங்கு.

—கவி ரவீந்திரநாத் தாகுர்

தண்ணீரும் செல்வமும்

படகில் தண்ணீரும், வீட்டில் செல்வமும் நிறைந்து விட்டால் இருகைககளாலும் அள்ளிஅள்ளி வெளியே தள்ளுங்கள். அப்பொழுதுதான் படகும் வீடும் பிழைக்கும்.

—கபீர்

மனித குலம்

மனித குலம் மெதுவாக முன்னேறுவதற்குக் காரணம், மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து செல்வதேயாகும். தனி மனிதன் நிலையோ வேறு.

—ஒரு மேலைநாட்டு அறிஞர்

சுதந்திரம் என்பது என்ன ?

சுதந்திரம் என்பது என்ன? அதன் சரியான பொருளை இதுவரை எவருமே திட்டமாகச் சொல்லவில்லை. எல்லோருமே சுதந்திரம் வேண்டும் என்கிறோம். ஆனால் அந்த வார்த்தைக்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான அர்த்தம் செய்து கொள்கிறார்கள்.

"ஒவ்வொரு மனிதனும் தன்னையும், தான் செய்யும் வேலையின் பயனையும் தன் விருப்பப்படி பயன்படுத்திக் கொள்வதே சுதந்திரம்" என்று சிலர் நினைக்கிறார்கள். "சில மனிதர்கள் மற்ற மனிதர்களையும், அவர்கள் வேலையின் பயனையும் தங்கள் விருப்பப்படி பயன்படுத்திக் கொள்வதே சுதந்திரம்" என்று வேறு சிலர் கருதுகிறார்கள்.

இவை இரண்டும் ஒன்றுக்கொன்று முரண். இரண்டு பேரும் தாங்கள் சொல்லுவதே "சுதந்திரம்", மற்றவர்கள் சொல்லுவது "கொடுங்கோன்மை", என்று சொல்லுகிறார்கள்.

ஆட்டின் குரல்வளையைப் பிடிக்க வந்த ஓநாயை, துரத்தி விடுகிறான் இடையன். ஆடு அவனைத் தன் ரட்சகன் என்று வாழ்த்துகிறது. ஓநாயோ, அதே காரியத்துக்காக, அவனைச் 'சுதந்திரத்தின் எதிரி' என்று திட்டுகிறது.

சுதந்திரத்தின் லட்சணத்தைக் குறித்து ஆடும் ஓநாயும் எப்படிக் கருத்துக் கொண்டிருக்கின்றனவோ அப்படியே மனித குலத்தைச் சேர்ந்த நமக்குள்ளும் ஒற்றுமை இல்லை. மக்கள் சமூகம் அவ்வப்பொழுது விடுதலை பெறும்பொழுது, சிலர் 'சுதந்திரம் வந்தது' என்கிறார்கள். சிலர் 'சுதந்திரத்துக்கு ஆபத்து' என்று கூக்குரல் போடுகிறார்கள்.

— ஆபிரகாம் லிங்கன்

பிறர் குற்றம்

பிரம்மா மனிதனைப் படைத்தபோது, மனிதனின் கழுத்திலே இரண்டு பைகளை மாட்டி விட்டார். ஒன்று முதுகிலும், மற்றொன்று மார்பிலும் தொங்கின.

"ஒரு பையில் உன் குற்றங்களையும், மற்றொரு பையில் பிறர் குற்றங்களையும் பொறுக்கிப் போட்டு வை" என்றார் பிரம்மா.

மனிதனும் அப்படியே செய்யத் தொடங்கினான். ஆனால் மார்புப் பையில் பிறர் குற்றங்களையும், முதுகுப் பையில் தன் குற்றங்களையும் பொறுக்கிப் போட்டுக் கொண்டான்.

எதற்காக? பிறர் குற்றங்கள் எப்போதும் தன் கண்ணில் படவேண்டும். தன் குற்றங்கள் ஒருபோதும் தன் கண்ணில் படலாகாது. இதற்காகத்தான்.

இது பிரம்ம சிருஷ்டியிலிருந்து இன்று வரையில் தொடர்ந்து நடந்து வருகிறது.

—ஈசாப்

இரண்டு காரணங்கள்

ஒரு மனிதன் ஒரு காரியத்தைச் செய்வதற்கு எப்பொழுதும் இரண்டு காரணங்கள் உண்டு; ஒன்று நல்ல காரணம், மற்றொன்று உண்மையான காரணம்.

—ஜே. பி மார்கன்

மூன்று உண்மை நண்பர்கள்

வயதான மனைவி, வயதான நாய், கையிலிருக்கும் ரொக்கம்.

—பெஞ்சமின் பிராங்க்ளின்

அவமானம்

ஏழையாய் இருப்பது அவமானம் அன்று; அதனை அவமானம் என்று நினைத்தலே அவமானம்.

—பெஞ்சமின் பிராங்க்ளின்

உழைத்தல்

'உழைத்தால்தான் உணவு' என்ற சட்டத்துக்கு நீங்கள் இன்றே, இப்பொழுதே கீழ்ப்படிய வேண்டும்.

—ஜான் ஸ்மித்

அரசியல் அமைப்பு

நாம் ஓர் அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் இருக்கிறோம். ஆனால் நீதிபதிகள் என்ன சொல்லுகிறார்களோ அதுதான் அரசியல் அமைப்புச் சட்டம்.

அரசியல்

நீங்கள் அரசியலை ஒரு தொழிலாகக் கொண்டால், நேர்மையாக வாழ்க்கை நடத்த முடியாது.

—லூயி. எம் ஹோ

அப்பாவி

எப்பொழுதாவது ஓர் அப்பாவி, சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப் பெறுகிறான்.

—கின் ஹப்போர்டு

ஆசிரியன்

தனது மகள் படிக்கக்கூடாதது என்று கருதும் எந்த ஒரு வார்த்தையையும் ஓர் ஆசிரியன் எழுதக் கூடாது.

—ரஸ்ஸல் லோவல்

எளிய நடை

எனது நடை எளிமையாக இருப்பதாகத் தாங்கள் (ஓர் பத்திரிகை ஆசிரியர்) நினைப்பதைக் கண்டு மகிழ் கிறேன். கருத்தை விளக்குவது எளிய நடையே. எனது நடையின் அழகைப்பற்றி மக்கள் பேச மாட்டார்கள் என்று நம்புகிறேன். அப்படி ஏதாவது எனது நடையில் அழகு இருக்குமானால், அதை நான் வேண்டுமென்றே செய்யாததால் அதனை மன்னித்து விடலாம். நடையின் மிகச் சிறந்த மதிப்பு, வார்த்தைகள் கருத்துக்களில் புகுந்து அடியோடு மறைந்து விடுவதேயாகும்.

— நத்தானியல் ஹாத்ரோன்

அமெரிக்கப் பழமொழிகள்

கடவுள் குடிகாரர்களையும், குழந்தைகளையும் அமெ ரிக்கர்களையும் பாதுகாக்கிறார்.

எதனையும் நான் ஒருமுறை பரீட்சிக்கத் தயார்.

உச்சியில் எப்பொழுதும் இடம் உண்டு.

கழுவும்போது எல்லாம் வெளியே வந்துவிடும்.

குண்டோதரனை யாரும் காதலிப்பதில்லை.

வீட்டில் குடையை விட்டுச் சென்ருல், அன்று நிச்சயம் மழை வரும்.

துன்பம் உன்னைத் துன்பப் படுத்துகிற வரையில், துன்பத்தை நீ துன்பப்படுத்தாதே.

இடி ஒரே இடத்தில் இரண்டு முறை விழுவதில்லை.

உழைத்தல் வேண்டும்—அதனுல் க்ஷேமம்.

கெட்ட ஜலதோஷத்தைக் காட்டிலும் இது மோசமில்லை.

நல்லவனுக இருக்க முடியாவிட்டால், சுத்தமாகவாவது இரு.

ஊதுகிற சங்கை ஊத வேண்டும்.

இந்தியாவுக்கு ஏற்ற ஆட்சி முறை

[இந்தியாவின் சுப்ரீம் கோர்ட்டில் முன்னுள் பிரதம நீதிபதியாக இருந்த ஸ்ரீ மேகர் சந்திர மகாஜன் எழுதிய கட்டுரை]

மூன்று வருஷங்களுக்கு முன்பாக என்னையே நான் ஒரு கேள்வி கேட்டுக் கொண்டேன். அரும்பாடு பட்டுப் பெற்ற சுதந்திரத்தையும், ஒற்றுமையையும், என் அருமை பாரத நாடு பாதுகாத்துக் கொள்ளுமா? அல்லது பழைய படி, ஒற்றுமை குலைந்து சின்னஞ்சிறு ராஜ்யங்களாகப் பிரிந்து, குறுகியஅரசியல், மொழிவெறியர்களின் கையில் சிக்கி அடித்துக் கொள்ளுமா?

ஒற்றுமை இல்லாததால்தான் இந்தியா அந்நியப் படையெடுப்பாளருக்கு அடிமைப்பட்டது. வண்டிவண்டியாகப் பொன்னும், வெள்ளியும், பெண்களும்கஜினிக்கும், பாரசீகத்துக்கும் கொண்டு செல்லப்பட்டனர். கைபர் கணவாய் வழியாக ஒருசில ஆயிரம் பேர்கள் இந்தியா வந்தார்கள். கங்கராவிலிருந்து சோமநாத் வரையில் அவர்கள் தடையின்றிச் செல்ல அனுமதிக்கப்பெற்றனர். இயற்கைத் தடைகள் பல இருந்தும், அவர்கள் தடுக்கப் பெறவில்லை.

மேனுட்டார் ஆதிக்கம்

வர்த்தகத்துக்காக மேற்கே இருந்து வந்தவர்களோ, தங்களது கட்டுப்பாட்டாலும், ஆயுத பலத்தாலும் சிதைந்து வந்த மொகலாயர் ஆட்சியை நீக்கி, ஆதிக்கம் பெற்றனர். நாடெங்கும் தங்கள் ஆட்சி அதிகாரத்தை ஸ்தாபித்தனர். இது எப்படிச் சாத்தியமாயிற்று? இந்தியர்களின் உதவியால்தான் இது முடிந்தது. இந்தியா

வின் பல பகுதிகளிலும் வசித்த மக்களிடையே, பல மொழி பேசுபவரிடையே, தங்கள் பாரத நாட்டின் மீது தேசாபிமானம் அடியோடு இல்லை. இந்திய மக்கள் அனைவரும் ஒரே கலாசாரத்தால் பிணைக்கப்பட்டிருந்தும், அவர்களிடை ஒற்றுமை இல்லை தங்கள் சின்னச் சிறு ராஜ்யங்கள் நன்றாக இருந்தால் போதும் என்ற சுயநலம் காட்டினர். அண்மையிலுள்ளவர்கள் நன்மையைப் பற்றிக் கவலை கொள்ளவில்லை. அண்மையிலுள்ளவர்கள் அழிவதைக் கண்டு சில இடங்களில் மகிழ்ச்சியுமடைந்தார்கள்.

நாட்டில் இந்த மாதிரியான ஆபத்து மீண்டும் ஏற்படாமல் தடுக்க வேண்டும். எப்படித் தடுப்பது என்பது பற்றி நான் ஒரு யோசனை கூறினேன். அரசியல் விளையாட்டில் ஈடுபட்ட சிலருக்கு இது பிடிக்கவில்லை. சுதந்திரத்தால் கிடைத்த சுகபோகங்களை அனுபவிப்பதிலேயே அவர்கள் நாட்டம் செலுத்தினர். என் யோசனை காலங் கடந்ததென்றும் அனுபவ சாத்தியமற்றதென்றும் ஒதுக்கினர். நான் ஒற்றை ஆட்சி முறையே வேண்டுமென்று கூறியிருந்தேன். அதை அரசியல் நிர்ணய சபை நிராகரித்து நாடெங்கும் சமஷ்டி அமைப்பை ஒப்புக்கொண்டு விட்டதால் ஒற்றை ஆட்சி முறையை இப்போது ஏற்படுத்த முடியாதென்று கூறிவிட்டனர்.

பிரிட்டனிலுள்ளதைப் போல ஒரே பார்லிமெண்டையும், ஒரே மந்திரி சபையையும் இங்கும் ஏற்படுத்துவதால், இன்று பல ராஜ்யங்களிலும் அரசியலில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கானவர்களுக்குப் பிழைப்பு இல்லாமல் போய் விடுமென்றும், வேலையில்லாக் கஷ்டம் பெருகுமென்றும் அதைத் தீர்க்க முடியாதென்றும் கூறப் பெறுகிறது. மேலும் சுயநல அரசியல், மொழி வெறியர்கள் இதை உண்ணுவிரதம், கலகம் முதலியவைகளால் எதிர்ப்பரென்றும் கூறுகின்றனர்.

இவ்விதத் தடைகள் இருப்பினும், எனது ஒற்றை ஆட்சி யோசனையை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். பாரத நாட்டையும், பாரத மக்களையும் ஐக்கியமாக ஒன்றுபடுத்த எனது யோசனை நான் சரியானதென்று கட்சி, கோஷ்டி முதலிய பற்றில்லாதவர்களில் பலர் என்னிடம் தெரிவித்துள்ளனர்.

சமஷ்டி ஆட்சியில்

சமஷ்டி ஆட்சி முறை சென்ற பத்து ஆண்டுகளுக்கு மேல் இருந்து வருகின்றது. அதனால் ஏற்பட்ட நன்மை தீமைகளென்ன? இந்த ஆட்சி முறை மக்களிடையே தேசாபிமானத்தையும் ஒற்றுமை உணர்ச்சியையும் வளர்த்துள்ளதா? ஒரு பிரிட்டிஷ்காரருக்கு பிரிட்டன் மீதுள்ள தேச பக்தியும், ஒரு பிரெஞ்சுக்காரருக்கு பிரான்ஸ் மீதுள்ள தேசாபிமானமும், இந்தியருக்கு இந்தியா மீது உள்ளதா? இதைப்பற்றி சற்றே யோசித்தால், இல்லை என்றுதான் என் மனம் கூறுகின்றது. இந்த அரசியல் அமைப்பு, தனித்தனி குட்டி அரசுகள் இருந்து வந்த அந்தப் பழைய காலத்துக்கு நம்மைத் திருப்பிக் கொண்டு செல்லும் பிற்போக்கானதாக இருக்கிறதென்றே உணர்கின்றேன். 'ஆந்திரா ஆந்திரர்களுக்கே" "பீகார் பீகாரிகளுக்கே" "வங்காளம் வங்காளிகளுக்கே', என்பன போன்ற கோஷங்கள் அதிகரிக்கின்றனவா? அல்லது குறைகின்றனவா? குறுகிய எல்லைக்குள்ளாக பலப்பல அரசியல் கோஷ்டிகள் கிளம்பி, மொழியின் பெயராலும் ஜாதியின் பெயராலும் அரசியல் ஆதிக்கத்தையும் அதிகாரத்தையும் பெற முற்படுகின்றார்களா? அல்லது விரும்புகின்றார்களா? என்று பணிவுடன் கேட்க விரும்புகின்றேன். இவ்வித சுயநல சக்திகள் அதிகம் வேலை செய்தால், நாட்டின் ஒற்றுமை குலைந்து, தனித்தனி சின்னச் சின்ன பகுதிகள் மற்ற பகுதியிலுள்ளவர்களை அங்

நியராகக் கருதி வேற்றுமை உணர்ச்சிகளை அதிகரிக்கவும் மாட்டார்களா? ஒவ்வொரு ராஜ்யத்திலும் நாட்டில் எந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களும் தாராளமாக சேவை செய்யலாம் என்று அரசியல் அமைப்புச் சட்டம் கூறினும் அந்தந்த ராஜ்ய மக்களுக்கே அங்கு வேலை என்ற கருத்து அதிகரிக்கவில்லையா?

நான் பார்க்கும் வரை, மக்கள் குறுகிய மனத்துடன் நினைக்கவே முற்பட்டுள்ளனர். பாரத நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்தவும், தேசபக்தியை வளர்க்கவும் நமது தலைவர்கள் கூடியளவு கத்தியும், உண்மையில் மக்கள் மாகாண ரீதியிலும், என் ஜாதி, என் மொழி என்ற அளவிலும்தான், நினைத்துக் காரியங்கள் செய்கின்றனர்.

ஒற்றை ஆட்சி

பிரிட்டிஷார், இந்தியா அனைத்தையும் ஒரே ஆட்சியின் கீழ் கொணர்ந்தனர். ஒற்றை ஆட்சி முறையை நாடனைத்துக்கும் ஏற்படுத்தினர். மாகாணங்கள் நிர்வாக உறுப்புக்களாக இருந்தன. இந்திய சமஸ்தானங்களும் ஒரே மன்னருக்கே விசுவாசமாக இருந்தன. இந்திய தேசிய காங்கிரஸ். இந்திய மக்கள் அனைவரையும் ஒரு தேசிய சமூகமாக ஒற்றுமைப்படுத்தியது. இந்தியாவில் தேசபக்தியை வளர்த்தது. மதம், மொழி, மாகாண வேற்றுமைகளுக்கு இடம் தராமல், சுதந்திரப் போராட்டத்தை நடாத்தியது. ஒரே ஐக்கிய இந்தியாவுக்காகப் பாடுபட்டது. தனித்தனி மாகாணப் பிரிவினைக்கோ. மொழி ஆட்சிகளுக்கோ வேறு கோஷ்டிகளுக்காகவோ பேசவில்லை; போராடவில்லை. அந்த நல்ல காரியம், இந்த சமஷ்டி அரசியல் அமைப்பினல் சிதைந்து வரவில்லையா?

இந்தியாவை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று முஸ்லிம் லீக் "இரண்டு தேசம்" பற்றிப் பிரசாரம் செய்

தது. பிரிவினை எவ்வளவு கசப்பாயினும், இந்தியத் தலைவர்கள் அதற்கு ஒப்பியது அறிவுடைமையேயாகும். பிரிவினையை ஒப்புக்கொண்ட பின், நமது நாட்டை ஐக்கியமாக, ஒரே தேசிய சமுதாயமாகச் செய்யக்கூடிய அரசியல் அமைப்பு எப்படிப்பட்டதாக இருக்க வேண்டுமென்பது முக்கிய கேள்வி. எந்த மொழி பேசினாலும், எந்த ஜாதியாயினும் யாவரும் பாரத நாட்டின் மீது தேசபக்தியுடன் இருக்க, எவ்வித அரசியலமைப்பு உதவும் என்பதே பிரச்னை. நாடு மேலும் பல பல கூறுகளாகப் பிளந்து விடாமல் பாதுகாக்க ஒற்றை ஆட்சியே மேலானதென்பது எனது கருத்தாகும். சமஷ்டி முறை குறுகிய அபிமானங்களுக்கும், மொழி வெறிக்கும், ஜாதி, மதச் சார்புள்ள இயக்கங்களுக்கும் மாகாண வேற்றுமைகளுக்கும் இடமளிக்கின்றது.

மத்திய மந்திரி சபை

நான் கூறுவது, பாலைவனத்தில் போட்ட கூச்சலாக இருக்கலாம். ஆனாலும் இந்தியாவுக்கு சட்டம் செய்ய ஒரே ஸ்தாபனம், ஒரே பார்லிமெண்டே வேண்டுமென்றும் நான் கருதுகிறேன். மத்திய மந்திரி சபையே பாரத நாட்டின் நிர்வாகமனைத்துக்கும் பொறுப்பாக இருக்க வேண்டும். **பார்லிமெண்ட் தேர்தல், கிராம ஜில்லா, மாகாண பஞ்சாயத்து சபைகள் மூலம் மறைமுகமான முறையில் நடைபெற வேண்டும்.**

நான் கூறும் இந்த யோசனையை விருப்பு வெறுப்பு இன்றி நிதானமாகக் கவனிக்க வேண்டுகிறேன். பழைய கருத்துக்களையோ, வேறு நோக்கங்களையோ கொண்டு இதைக் குழப்பக்கூடாது: பாரதநாட்டை ஐக்கியப்படுத்தி, மக்களனைவரையும் ஒரு தேசிய சமுதாயமாக்கி, அவர்களிடையே தேசாபிமானத்தை வளர்ப்பதெப்படி என்ற ஒரே நோக்கத்தைக் கொண்டு இதை நிதானிக்க

வேண்டுகிறேன். யாரையும் புண்படுத்த வேண்டுமென்று நான் 1950-ஆம் வருஷ அரசியல் திட்டத்தைக் குறை கூற வில்லை. மேற்குறித்த மேலான நோக்கத்தை மனத்தில் கொண்டே இதை எழுதுகிறேன் என்றாலும் எந்த ஒரு வரையாவது எனது கூற்றுப் புண்படுத்தினால், நான் மனப் பூர்வமாகக் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகி றேன்.

சமஷ்டி முறையினால், மாகாண மொழி வெறிகள் அதிகரித்துள்ளதாயும், நாட்டின் ஒற்றுமை உணர்ச்சி யைக் குலைத்துள்ளதாகவுமே நான் கருதுகிறேன். மாகாண சட்டசபை, மந்திரிசபை இவற்றுக்காகச் செல விடப்படும் பெருந்தொகைகளும் வீணேயாகுமென்று பொதுவாகக் கூறப்படுகின்றது. நிர்வாகம் திறமையாக இருக்க வேண்டுமானால் எந்த ராஜ்யத்திலும் ஐந்து மந்திரிகளுக்கு அதிகமாக இருக்கக்கூடாது பலபல அர சியல் ஜால வித்தைக்காரர்களையும் கோஷ்டிகளையும் திருப்தி செய்ய, வண்டி வண்டியாக மந்திரிகளும், பரிவா ரங்களும் தேவையில்லை. பல ராஜ்யங்களில் கணக்கற்ற "பெரிய மனிதர்கள்", சின்னச் சின்னக் காரியங்களிலும் தலையிட்டுக் குழப்புகிறார்கள். ஜில்லா நிர்வாகத்தில் சங்க டம் ஏற்படுகிறது. ஓயாத டெலிபோன் கூப்பாடுகள் போட்டு, தங்கள் தொகுதி வாக்காளரைத் திருப்தி செய்ய அரசாங்க ஊழியருக்குப் பெருந் தொல்லை கொடுத்து அவர்களைக் கெடுக்கிறார்கள்.

பஞ்சாப் மாகாணத்தில்

எனது சொந்த பஞ்சாப் மாகாணத்தில் 1950-ஆம் வருஷ அரசியல் சட்டம் எப்படி நடைபெறுகிறதென் பதை முதலில் பார்ப்போம். சம்பந்தப்பட்டவர்களெல் லாரும் மன்னிக்க வேண்டும். அங்கு ஸ்திரமான அரசாங்

கமோ, திறமையான நிர்வாகமோ இல்லை. அரசியல் சட்டத்தை நிறுத்தி வைத்து ஜனாதிபதியே நிர்வாகத்தை மேற்கொண்டபோதுதான் நிலைமை மேலாக இருந்தது. சென்ற பத்து வருஷ காலத்தில் பல அரசியல் கோஷ்டிகளிடையேயும் அதிகார வேட்டைக்காரர்களுக் கிடையேயும் எத்தனை சூழ்ச்சிகள்! ஒருவரை ஒருவர் காலை இழுத்துவிடச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அதே தேர்தலையே குறிக்கோளாகக் கொண்டு புதிய புதிய சட்டங்களைச் செய்தார்கள். சென்ற பத்து வருஷங்களில் நிறைவேற்றிய சட்டங்களின் எண்ணிக்கை முந்திய 20 வருடங்களில் செய்யப்பட்டதைவிட இரட்டிப்புக்கு மேலாகும். அவற்றில் பல அமுலுக்குக் கொண்டுவர முடியாதது. வரிப்பளுவாலும், பல கட்டுப்பாடுகளாலும் சங்கடப்படும் பஞ்சாபிகளின் நன்மைக்காக இச்சட்டங்களாம். இதே சமயம் மந்திரிகள் பெரும் பணச் செலவில் உல்லாசப் பிரயாணங்களை செய்கின்றனர்.

நகரங்களிலும், கிராமப்புறங்களிலும் வசிக்கும் பல மக்களைக் கண்டு பேசியுள்ளேன். நிர்வாகத்தைப் பற்றி குறை கூறாதவர்களே இல்லை. மந்திரிகள்மீது அதிக வெறுப்பு தங்களுக்கு எல்லாம் தெரியுமென்ற எண்ணம் மந்திரிகளுக்கு இருப்பதாக மக்கள் கண்டிக்கின்றனர். சென்ற பத்து வருஷங்களில் ஒரே கட்சியிலேயே பல கோஷ்டிகளும், பரஸ்பரச் சண்டைகளும், போட்டி பொறாமைகளும் அதிகரித்துள்ளன. சுயநலமும் பதவி வேட்டையும்தான் காரணம். மந்திரி சபை என்றும் ஐக்கியப்பட்டிருக்கவில்லை. அரசியல் கோஷ்டிகளைத் திருப்தி செய்ய, யார் யாரையோ எல்லாம் எப்படியோ கட்டி வைத்திருந்தனர். அரசியல் ரீதியிலோ பொருளாதாரத்திலோ மாகாண நிர்வாகம் மோசமாகும். ஜில்லா நிர்வாகம் தன்னிடமே நம்பிக்கை இழந்து விட்டது.

அதிகார ஆசை

யார் கையிலாவது பசை தடவா விட்டால் ஒரு காரியமும் ஆகாது. யாருடைய சிபார்சும் இல்லாவிட்டால் எதுவும் நடவாது. அரசியல் வாதிகள் குறுகிய ஜில்லாப் பிராந்திய வாதங்களில் ஈடுபட்டனர். இந்திய ராஜ்யம் வேண்டுமென்கின்றனர் சிலர். பஞ்சாபி ராஜ்யம் வேண்டுமென்கிறார் மற்றவர். சிலர் ஹரிஜன ராஜ்யம் வேண்டுமென்றும், மலைராஜ்யம் வேண்டுமென்றும் கோஷங்கள் கிளப்புகின்றனர். ராஜ்யத்தைப் பலபல சின்னத் துண்டுகளாக்க வேண்டுமென்று வேறு சிலர் கேட்கின்றனர். எல்லாம் அதிகார ஆசை தான். 1950-ம் வருஷ அரசியல் சட்டம் சென்ற 10 ஆண்டுகளாக நடந்துள்ள லட்சணம் இது. நாட்டின் ஒற்றுமையை வளர்க்க இது உதவவே இல்லை. மொழிப் பிரச்னை, இந்த ராஜ்யத்தில் மதவெறிகளையும் பிரிவினைகளும் கிளப்பி விட்டுள்ளது.

நமது மந்திரிகளில் பெரும்பாலோரும் டில்லிக்கும் சந்திகாருக்கும் (பஞ்சாபின் தலைநகர்) இடையில் அலைந்து கொண்டும் கிராம மக்களிடையில் வாய்வீச்சு வீசிக் கொண்டும் காலத்தை வீணாக்குகிறார்கள். தங்களுக்கு ஆள் திரட்டித் தங்கள் நன்மையைக் காத்துக் கொள்ளுகிறார்கள். தேசிய ஸ்தல மொழிப் போட்டிச் சண்டை உச்சமடைந்துள்ளது. இரண்டையும் சமமாகச் செய்ய முற்படவில்லை.

பாட்டியாலா மகாராஜாவுக்கு சீக்கிய ராஜ்யம் அளிப்பதாக ஜனாப் ஜின்னா கூறியதை அவர் தேசாபிமானத்துடன் நிராகரித்தார்.

தன் ராஜ்யத்தையும் தியாகம் செய்தார். ஆனால் இப்போது வகுப்புவாத முறையில் சின்னச் சின்ன ராஜ்யங்களைப் பிரிக்க வேண்டுமென்று கிளர்ச்சிகள் எழுப்பப்

பெறுகின்றன. ஆண்டவன்தான் அவர்கள் கண்ணைத் திறக்க வேண்டும்.

எங்கும் சச்சரவு, வகுப்புப் பிணக்கு, மொழிவெறி முதலியவற்றுக்கான வித்துக்கள், சென்ற பத்து வருஷ சமஷ்டி ஆட்சியில் விதைக்கப் பெற்றுள்ளன. தற்சமயம் ஒற்றுமைப்படுத்தும் ஆங்கில மொழிக்கும் எதிர்ப்பு. மந்திரி சபைகளையும், சட்ட சபைகளையும் கலைப்பதால் அரசியல்வாதிகள் தவிர வேறு யாரும் வருத்தப்பட மாட்டார்கள். அரசியல்வாதிகளின் புரட்டுக்களைக் கண்டபின், பொதுமக்கள் ஜனாதிபதியின் ஆட்சி வரவேண்டுமென்று பிரார்த்திக்கிறார்கள்.

சமஷ்டி அரசியல் அமைப்பு அரசியல்வாதிகளிடையே ஒரு சுயநல ஆசையைக் கிளப்பி விடுகிறது ஒரு பகுதி எவ்வளவு சிறிதாக இருப்பினும், அதைத் தனி அரசாக்கி, அங்கு தாங்கள் ஆள வேண்டுமென்ற ஆசையே அது.

டில்லியிலே ஒரு சூழ்ச்சிக்கார அரசியல் கும்பலுள்ளது. அக்கும்பல், டில்லி நகரை ஒரு தனி அரசாக்கிவிட வேண்டுமென்று என்னென்னவோ செய்கிறது. பல ஆர்ப்பாட்டங்கள் நடக்கின்றன. அங்கு நகரசபையில் இப்போது தங்கள் சூழ்ச்சிக் கைவரிசையைக் காட்டுகின்றனர்.

'இமாசலம்' என்பது மிகவும் சிறிய பகுதி. அங்கு பொருள்வசதி இல்லை. அதுவும் தனி ராஜ்யமாக வேண்டும். இது பற்றிய கூச்சல்கள் கிளம்புகின்றன. பஞ்சாபிலே சட்டசபை யில்லாமல் கவர்னரே சில ஆலோசகர்களைக் கொண்டு ஆட்சிநடத்தியிருந்தால், அங்கு உணவுப் பஞ்சங்கள் ஏற்பட்டிராது. இப்போது பேச்சுக்கள், உபதேசங்கள் பயனற்ற இவற்றுக்குத்தான் அங்கு பஞ்ச

மில்லை. கொடுக்கும் உறுதி மொழிகளை அவர்களால் என்றும் நிறைவேற்ற முடியாது.

வடக்கே இமயமலையிலிருந்து தெற்கே கடலை நோக்கி வருவோம். கேரளம் ஒரு சிறிய ராஜ்யம். கொச்சி, திருவாங்கூர் என்ற இரு சமஸ்தானங்களைப் பிணைத்து இப்புதிய ராஜ்யம் உருவாக்கப்பட்டது. அங்கு சமஷ்டி அரசியலமைப்பினில் நடப்பதென்ன என்று பார்ப்போம்.

இலட்சியத்தை முறியடிக்கும்

அரசியல்முறை சமஷ்டியாக இருப்பினும் எல்லா ராஜ்யங்களிலும் காங்கிரஸ் கட்சியே மெஜாரிட்டியாக இருப்பதாலும், காங்கிரஸ் தலைமைப்பீடமே அவர்களை ஆட்டி வைப்பதாலும், அரசியல் திட்டம் முறியாமல் உள்ளது. நாட்டு நிர்வாகம் உண்மையில் ஒற்றை ஆட்சிப் போலவே நடக்கின்றது. மண்டல ராஜ்யங்கள், வேறு கொள்கைகளும், லட்சியங்களுமுள்ள கட்சிகளின் ஆதிக்கத்துக்கு வருவதாயின், என்ன நேரிடுமென்பதைப்பற்றி நான் முன்னர் ஒருசமயம் கூறியிருந்தேன். ராஜ்ய அரசாங்கங்களுக்கு, கல்வி, சட்டம், ஒழுங்கு, விவசாயம்,போலிஸ், சுகாதாரம், சிறை முதலிய நிர்வாகம் பற்றி விசேஷ அதிகாரங்களுண்டு. இவ்விஷயங்களில் தலைமை அரசாங்கம் மாகாண அரசுகளின் அதிகாரத்தில் தலையிட முடியாது. ஆயுதபாணிகளான போலீஸ் படைகளைத் தங்கள் கட்சிக்காரரைக் கொண்டே அமைத்துக் கொள்ளலாம். தங்கள் கட்சி இலட்சியங்களை நிறைவேற்றும் முறையில் கல்வித் திட்டத்தை வகுக்கலாம். தங்கள் கட்சியினருக்கே நிலங்களை வழங்கும் முறையில் சட்டதிட்டங்களை வகுக்கலாம். அவர்கள் அடிப்படை உரிமைகளையெல்லாம் அலட்சியம் செய்து தலைமை அரசாங்க அதிகாரத்தையும் மீறி, ஒரு தனியான சுதந்திர ராஜ்யமாகப் பிரிந்துவிடவும் முற்பட

லாம். அதுபோன்று பொதுத் தேர்தலின் பயனாக ஐந்தாறு தனிராஜ்யங்கள் ஏற்படுமாயின், வலதுசாரி அல்லது இடதுசாரிக் கட்சிகள் அங்கு ஆட்சி செலுத்தி தங்கள் கட்சி நலனையே கருதுவதாயின், இந்தியாவின் ஒற்றுமை சிதையும். பாரதநாட்டின் மீது தேசாபிமானமென்பது பெரிதும் குறையும். சமஷ்டி அரசியலால், நிர்வாகத்திலே பல சங்கடங்கள் ஏற்படுவதுடன், நாட்டை ஒன்றுபடுத்தும் லட்சியத்தை முறியடிக்கும். தங்களது கல்வி, மொழிக் கொள்கைகளால், ஒரு ராஜ்ய மக்களை, அண்டை ராஜ்ய மக்களிடமிருந்து பிரித்து, அவர்களை அன்னியர்களாக்கவும் செய்யும். அன்று நான் என்ன நினைத்தேனோ அது கேரளத்தில் இன்று உண்மையாயிற்று. அங்கு கம்யூனிஸ்டு கட்சி அரசாங்கப் பொறுப்பேற்றதும், தங்கள் கட்சியின் லட்சியங்களைப் பரப்ப, தங்கள் அதிகாரத்தை பயன்படுத்தினர். அரசியல் திட்டத்தைத் தங்கள் கட்சிக்காரரின் நன்மைக்காக உபயோகித்தனர்.

இதெல்லாம் ஏற்பட்டது சமஷ்டி அமைப்பினால் தான். பல சட்ட, நிர்வாக அதிகாரங்கள், சுயாட்சி பெற்ற ராஜ்யங்களில் அவர்களுக்குக் கிடைப்பதாக இருக்கின்றன. பிரிட்டனில் உள்ளது போல் ஒற்றை ஆட்சி முறை இருப்பின், அதிகாரத்துக்கு வரும் கட்சி நாடனைத்திலும் நிர்வாகத்தை நடத்துகின்றது. அரசாங்க ஊழியர்களைப் பாதிக்காமல் தனது கொள்கைகளின் படி நாட்டை நிர்வாகிக்கின்றது. ஸ்காட்லந்தில் ஒரு ஆட்சியும், வேல்ஸிலே வேறொரு வித ஆட்சியும் இருப்பதில்லை.

பாரத நாடு கம்யூனிஸ்டு மயமாயினும் சரி, அது ஒரே ஐக்கிய பாரதநாடாக இருக்கும். கம்யூனிஸ்டு லட்சியத்தை ஆதரிக்கும் ஒரே பாரதமாக இயங்கும். இதற்கு மாறாக அது வலதுசாரி ஆட்சிக்கு உட்படினும் அப்பொ

முழுதும் ஒற்றை ஆட்சி முறைப்படி ஒரே பாரதமாக இயங்கும். தேர்தலில் எந்தக் கட்சி அதிகாரத்துக்கு வந்தாலும் சரி, அந்தக் கட்சியின் கொள்கையின்படி நாடெங்கும் சீரான ஒரே ஆட்சியாக அமையும்.

நிர்வாகங்களிலுள்ள குறை

பஞ்சாப், கேரளம் இம்மாகாணங்களிலுள்ள நிர்வாகத்திலே என்ன குறைகளுள்ளனவென்று குறிப்பிட்டேனே அவையே மற்ற ராஜ்ய நிர்வாகங்களிலுமுள்ளன. வங்காளத்திலே சில சமயம் கிளர்ச்சிகள் ஏற்படுகையில், பல கோஷ்டிகளும், கும்பல்களும், கட்சிகளும், லஞ்சம் சுயநலம் முதலிய ஊழல்களும் அம்பலத்துக்கு வருவதைக் காணலாம். சென்ற முறை மந்திரிகளில் ஒருவர் அங்கு ராஜிநாமாச் செய்தபோது. அங்குள்ள ஊழல்கள் சற்றே வெளிப்பட்டன. 1950-ஆம் வருஷ அரசியல் அமைப்புச் சட்டப்படி, வங்காளிகளுக்கு, வங்காளி அல்லாதவர் மீது வெறுப்பு அதிகரித்து வருகின்றது. அங்கு ஹைகோர்ட்டுக்கு வெளி மாகாணத்திலிருந்து ஒருவரை நியமிப்பது அசாத்தியமாகும். கண்டனங்கள் கிளம்பும். பாரத நாட்டின் சுதந்திரத்துக்காகப் போராடி உயிர் நீத்த பல அரிய தேசாபிமானிகளை வங்காளம் ஈன்றெடுத்தது. அகில இந்தியப் புகழ்பெற்ற தலைவர்களைத் தந்தது. அவர்கள் இந்தியாவை ஒரே தேசமாக இணைத்தனர் ஆனால் இப்போதோ "வங்காளம் வங்காளிகளுக்கே" என்ற கூச்சலும் எண்ணமும்தான் ஓங்கி வருகின்றன.

போட்டி மனப்பான்மை

இந்தியாவிலேயே உத்தரப் பிரதேசம்தான் மிகப் பெரிய ராஜ்யமாகும். தலைமை மந்திரி சபையில், அந்த ராஜ்ய தலைவர்கள் பெரிய பதவிகள் வகிக்கின்றனர்.

காங்கிரஸின் மேலிடத்திலும் அவர்கள் இடம் பெற்றுள்ளனர். கோஷ்டி சூழ்ச்சிகள் கிளம்பாதபடி தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்துகின்றார்கள். ஆனாலும் பஞ்சாபிலுள்ளதைவிட உத்தரப் பிரதேசத்தில் கோஷ்டிப் பிரிவினைகள் அதிகமுள்ளன. இப்போது அந்தக் குமிழி வெடிக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. சமாளிக்க முடியாதபடி நிலைமை மோசமாகி விட்டது. தனிப்பட்டவர் அதிகார ஆசை கொண்டு போட்டி போடுகிறார்கள். நிர்வாகம் மோசமாக இருப்பதாகக் காரணம் சொல்லப்படுகின்றது.

அதிகாரத்திலுள்ள கோஷ்டிக்கு ஆதரவு தேடுவதற்காக மந்திரிகளின் எண்ணிக்கையைக் கூட்டியும் குறைத்தும் வருகின்றனர். 'ஆமாம் சாமி' போடாதவர்களை வெளியேற்றி விடுவர். எல்லாரும் ஒரே கட்சிதான். அதனால் கொள்கையில் வேற்றுமை கிடையாது. சில ராஜ்ய மக்களுக்கு உத்தரப் பிரதேச மக்கள் மீது வெறுப்பும் துவேஷமுமுள்ளன. அங்கு பேசப்படும் இந்திக்கு மாறாகவும் எதிர்ப்பு கிளம்புகிறது. உத்தரப்பிரதேசத்துக்கும் வேறு சில ராஜ்யங்களுக்கும் போட்டி மனப்பான்மை அதிகரிக்கின்றது. இவ்வித நிலை, நாட்டின் ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் பலப்படுத்த உதவுமென்று கூற முடியுமா? சமஷ்டி அரசியல் அமைப்பும், மாகாண சுயாட்சியும்தான் இந்த விஷமத்துக்குக் காரணமாகும். உத்தரப் பிரதேசத்தின் கிழக்குப் பகுதி தனி ராஜ்யம் வேண்டுமென்று கேட்கிறது. பிளவுபட்டுப் பிரிந்து செல்லவேண்டுமென்ற உணர்ச்சிகளே அதிகரிக்கின்றன. ஒற்றுமையாக, ஒரே தேசிய சமுதாயமாக வேண்டுமென்ற நோக்கம் மறைகின்றது.

ராஜஸ்தானைப் பற்றிய சில உள் அந்தரங்கங்களை நானறிவேன். பிக்கானீர் மகாராஜாவின் ஆலோசகராக

நான் சில மாதங்கள் இருந்ததால் அங்குள்ள கட்சிகள், கோஷ்டிகள், சூழ்ச்சிகள் இவற்றை நான் அறிவேன். அங்கு அதிகாரத்திலுள்ள அரசியல்வாதிகளின் ஒரே நோக்கம் என்ன தெரியுமா? எப்படியும் தங்கள் பதவிகளை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டுமென்பதும், எதிரிகளை ஒதுக்கித்தள்ள வேண்டுமென்பதுமேயாகும்.

பிரதேசங்களுக்கிடையே ஒற்றுமையில்லை

ஜெயப்பூரை தலைநகராகக் கொண்டு பல சமஸ்தானங்கள் ஐக்கியப்பட்டு ராஜஸ்தான் ராஜ்யமாகியது. ஹைகோர்ட்டை எங்கே அமைப்பது என்பதை பற்றி ஜயப்பூருக்கும் ஜோதிப்பூருக்கும் அதிகத்தகராறு ஏற்பட்டது. பாரதநாட்டின் மீது அங்கு எவ்வளவு அபிமானம் உள்ளதென்பதை அந்தத் தகராறு நிரூபித்துக் காட்டியது. ஜோதிப்பூர் மக்களும், ஜெயப்பூர் மக்களும், வேறுபட்டவர்களென்ற எண்ணம் அதிகமுள்ளது. ஒற்றை ஆட்சி இருந்தால், மாகாண ராஜ்யப் பொருமைகளும் குரோதங்களும் வளரா. நாடனைத்தும் ஒரே ஆட்சியின் கீழிருப்பின், ஆட்சியாளரும், ஜாகிர்தார்களும் அதற்கு அடங்கியிருப்பர். தங்களுக்கு பதில் வேறு புதிய தலைவர்கள் அந்தந்த இடங்களில் கிளம்புவதை அவர்கள் வெறுக்கிறார்கள்.

ஆந்திராவிலே, ஹைதரபாத்தின் பழைய மதிப்புமிக்க கலாசாரமும், மொழியும் படிப்படியாக மறைந்து வருகின்றன. தெலுங்கு, தெலுங்கல்லாத பிரதேசங்களுக்கிடையே ஒற்றுமையில்லை, இந்தியாவின் ஒற்றுமையையும், தேசாபிமானத்தையும் வளர்க்க எதுவும் செய்யப்படவில்லை. ஜாதி வேற்றுமைகள் தலைதூக்குகின்றன. வகுப்புப் பிணக்குகளும் பூசல்களும் பகிரங்க ரகசியம்.

ஆந்திர ராஜ்யம் தனித்து பிரியாமல் சென்னையுடனேயே இருந்திருப்பின், ஐக்கிய இந்திய லட்சியத்துக்கு அது பெரிதும் உதவியிருக்கும்.

பீகாரிலே இரு அரசியல் தலைவர்களிடையே கட்சிப் போட்டிகள் வளர்வது பலருக்கும் தெரிந்த விஷயம். அவர்களிடையே அன்பு எதுவுமில்லை. அங்கு பகிரங்கமாகப் பிளவு ஏற்படாமைக்குக் காரணம் டில்லி அரசியல்வாதிகள் சிலரது செல்வாக்குத்தான். பீகாரிகள் வங்காளிகளை வெறுக்கிறார்கள். நீண்ட காலமாக பீகாரில் வசித்தாலும் அந்த வங்காளிகள் வெறுக்கப்படுகின்றனர். ஜாதி வகுப்புப் பூசல்கள் பலப்பட்டு வருகின்றன. அங்குள்ள வங்காளிகள் யாரையும், உங்களுக்கு பீகாரிகளிடம் நியாயம் கிடைக்கிறதா ? என்று கேட்டுப் பாருங்கள். ஜார்கண்ட் கட்சி, ஜனதா கட்சி, பி. எஸ். பி. சமதர்மிகள், காங்கிரஸ், கம்யூனிஸ்டு முதலிய பல கட்சிகளும் பதவி வேட்டைக்காகவும் அதிகாரத்தைக் கைப்பற்றவும் போட்டி போடுகின்றன. லஞ்சம் சுயநலம் முதலியவை பஞ்சாபிலுள்ளதை விட மோசமாகும்.

அவல நிலை

சென்னையிலே ஒரு கட்சி ஏற்பட்டுள்ளது. அது இந்திய அரசியலமைப்புக்கு விசுவாசம் தெரிவிக்க மறுக்கிறது. பாரத நாட்டிலிருந்து தனித்துப் பிரியவும் விரும்புகிறது. தேசியக் கொடியையும், அரசியல் அமைப்பு திட்டப் பிரதியையும் கொளுத்துகிறது. இந்தியாவுக்கும் தமிழ்நாட்டுக்கும் பொதுவான கலாசாரம் கிடையாதென்றும் மறுக்கின்றது. பிராமண—பிராமணரல்லாதார் பிரச்னை வேறு. ஜாதி வகுப்பு அடிப்படையில் பிரிவினை சக்திகள் அதிகமாகின்றன. கோஷ்டி சூழ்ச்சிகளும், வேறு அரசியல் நோய்களும் அங்கு இல்லாமலில்லை.

பம்பாயிலே மகாராஷ்டிரர்களும், குஜராத்திகளும் தெருவில் அடித்து கொண்டதைப் பார்த்தோம். இருசாரினரும் பாரத நாட்டு மக்கள் என்று, தேசாபிமானத்துடன் தங்களைக் கருதியிருந்தால், இந்த நிலை ஏற்படுமா ? பம்பாய் ராஜ்யத்தில் தனி சட்டசபையில்லாமல் அது ஒரு நிர்வாக உறுப்பாக மட்டும் இருந்திருப்பின், இவ்வித அவலநிலை ஏற்பட்டிராது. பம்பாய்தான் இந்தியாவிலேயே மிகவும் செல்வம் நிறைந்த நகரம். அதன்மீது அதிகாரம் செலுத்த, சட்டசபை மூலம் மகாராஷ்டிரர்கள் விரும்புகிறார்கள். குஜராத்திகளையும் மற்றவர்களையும் மகாராஷ்டிரர்கள் விரும்புவதில்லை. அவர்கள் தனித்து ஒரு ஜாதியாகக் கூடுகிறார்கள்.

1950-ம் வருஷ அரசியல் திட்டம் பாரதம் ஓர் முக்கிய நாடாக முடியாமல் தடுத்து வருகின்றது. இது இந்தியாவின் ஒற்றுமைக்குப் பெரிய ஆபத்துமாகும். இந்த அரசியல் திட்டத்தின் பயனை, அரசியல்வாதிகள், அதிகமான ராஜ்யங்கள் வேண்டுமென்றும், ஆங்காங்கே குண்டுசட்டியில் குதிரை ஓட்டலாமென்றும் விரும்பி அதற்காக முனைகின்றார்கள்.

சூழ்ச்சியும் கைலஞ்சமும்

மைசூர் ராஜ்யத்திலும் சூழ்ச்சிகள் உள்ளன. முன்னாள் முதல் மந்திரியைக் கேட்டால் அங்குள்ள ஊழல்கள் அம்பலமாகும். கோஷ்டி சூழ்ச்சிகளும், கைலஞ்சமும் அதிகமுள்ளன. மைசூர்காரர்களுக்கு மைசூரைப் பற்றி மட்டும் நினைப்பு. வேறு விஷயங்கள் பற்றி அவர்களுக்குக் கவலையில்லை.

ஒரிஸாவிலே, ஒரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் விரோதம். ஒரே மாகாணமாக இருந்தபோது வங்காளிகள், பீகாரிகள், ஒரியர்கள் எல்லாரும் சகோதரர்கள்

போல ஒற்றுமையாக வாழ்ந்தனர். இப்போது அப்படி இல்லை. ஒரியா அரசியல் போக்கைக் கவனித்தால், நிம்மதி யடைவதற்கில்லை. நிலையான அரசாங்கம் ஏற்பட முடியாதுள்ளது. மற்ற ராஜ்யங்களிலுள்ள குறைகள் இங்கும் பூரணமாகவுள்ளன.

மத்தியப் பிரதேசத்திலுள்ள அரசியல்வாதிகள் அந்த ராஜ்யத்தை பிளவுபடுத்த வேண்டுகிறார்கள். விதர்ப்பா முதலிய வேறு சில பகுதிகள் தனித்துப் பிரிய வேண்டுமாம், டாக்டர் கட்ஜூ, தமது கட்சியைச் சேர்த்து ஒன்றுபடுத்தி நடத்திப் போக சங்கடப்படுகிறார். அங்கு லஞ்ச ஊழல்கள் அதிகமென்றும் சில அரசியல்வாதிகள் பெரும் பணம் திரட்டி விட்டதாயும் கூறப்படுகிறது.

சமஷ்டி ஆட்சிமுறை உதவாது

ஒரே தேசிய சமுதாயத்தை ஏற்படுத்தவும், பாரத நாட்டின்மீது தேசாபிமானத்தை வளர்க்கவும், அது குலையாமல் பாதுகாக்கவும். பிரிட்டனிலுள்ளது போன்ற அரசியல் அமைப்பே சாலச் சிறந்தது. ராஜய மந்திரி சபைகளுடன் கூடிய சமஷ்டி ஆட்சிமுறை இதற்கு முற்றிலும் உதவாது. தனித்தனி ராஜ்யங்கள் ஏற்பட வேண்டுமென்ற உணர்ச்சிகளை இது தூண்டிவிடுகிறது. அரசியல் வாழ்வையே ஆபாசப்படுத்துகிறது. இந்த சமஷ்டி அமைப்பு எவ்வளவு சீக்கிரத்தில் ஒழிக்கப்படுகிறதோ அவ்வளவுக்கும் நல்லதாகும். ராஜ்யங்களை, ஆலோசனைகளுடன் கூடிய கவர்னர்கள் நிர்வாக உறுப்புகளாக நிர்வகித்து வரலாம். முக்கிய உத்தியோகங்களை தலைமை அரசாங்கப் பொறுப்பில் விட்டு, ஸ்தல தேவைகளுக்கு மட்டும் ஆங்காங்கே சிப்பந்திகளை நியமித்துக் கொள்ளலாம்.

1950-ம் வருஷ அரசியல் அமைப்பின் பெரிய குறை என்னவெனில், அது, பிரிட்டிஷார் *1935*-ம் வருஷத்தில் தயாரித்த அரசியல் திட்டத்திலிருந்து பெரும் பகுதியை சுவீகரித்ததே! இந்தியாவைப் பிரித்தாளும் நோக்கத்துடன், போட்டிகளை வளர்க்கும் முறையில் பிரிட்டிஷார் அந்த அரசியல் திட்டத்தை வகுத்தார்கள். பல ராஜ்யங்களை அமைத்தார்கள். நாட்டைப் பிரிக்கும் அந்த அரசியலமைப்பு நாட்டை ஐக்கியப்படுத்த உதவவே உதவாது. தனித்தனியாக ராஜ்யங்கள் பிரிந்து விடாமல், அவை ரயில்வேக்களைப்போல் ஒன்று சேர்க்கப்பெறுவது உத்தமமாகும்.

காற்றாடி யந்திரம்

காற்றைப் பயன்படுத்தி அன்றாட வாழ்வில் அதன் பலனை அனுபவிப்பது என்ற கருத்து டச்சு மக்களுக்கு மட்டும் உரியதன்று. உண்மையில் காற்றாடி யந்திரத்தின் மூலத்தைக் கண்டுபிடிக்க முயன்றவன் பாரசீகத்தையோ அரேபியாவையோ சேர்ந்தவனாயிருக்கலாம்.

என்றாலும், அதற்கு ஒரு முழுஉருவம் தந்து நீரிறைக்கவும், மாவு அரைக்கவும் பயன்படச் செய்வதில் தலை சிறந்து நிற்பது ஹாலந்துதான். பல்வேறு நாடுகளில், டச்சு வல்லுநர்களின் யோசனைகளுக்கேற்ப, இந்த காற்றாடி யந்திரங்களைப் பல மாதிரிகளில் பயன்படுத்துகிறார்கள். கடலிலிருந்து மீட்ட நிலத்தில் இதைத் தண்ணீர் இறைப்பதற்காகச் சிறப்புவகையில் பயன்படுத்துவது டச்சுக்காரரின் தனித் தன்மை எனலாம்.

இந்தத் தண்ணீரிறைக்கும் காற்றாடி யந்திரம் ஐந் நூறாண்டுகளுக்கு முன்பே செயல்படத் துவங்கியது என்று வரலாறு காட்டுகிறது. மாவு அரைக்கப் பயன் பட்ட யந்திரத்திலிருந்து அந்தக் காலத்திய யந்திரம் உருவாகியது. காற்றாடிகளைத் தாங்கியுள்ள யந்திரம் முழுவதுமே, காற்று வீசவேண்டிய சமயத்தில் ஒரு மரக் கம்பத்தை அணைத்தாற்போல் சுழலும். பாரசீகத்திலும் அரேபியாவிலும் இருந்தவை மாவு அரைக்கமட்டும் பயன் பெற்றன. ஹாலந்தில் அத்தகைய யந்திரங்கள் 700 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருக்கின்றன.

காற்ருடி யந்திரங்கள் எப்போதுமே, அழகூட்டும் காட்சிப் பொருளாய் விளங்கி வந்திருக்கின்றன. தொலே வில் இருந்து காணும் போது சிறிய விளேயாட்டுக் கருவி போல் தோற்றமளித்துக் களிப்பூட்டும். அருகில் நின்று பார்க்கும் போது, காற்றழுத்தத்தின் கீழ் இடைவிடாது தண்டையும் மரச் சக்கரத்தையும் வேகமாகச் சுழற்றும் பேராற்றல் புலப்படும். இந்த நாட்டில் ஆண்டு முழுவதும் காற்று எப்போதுமே வீசிக் கொண்டிருக்கிறது. நிலமெல் லாம் வெள்ளம் பாயாமல் இருக்க அந்த காற்று தேவைப் படுகிறது. இந்த யந்திரத்தின் அடிப்படைத் தத்து வத்தை மாற்றவும் முடியாது என்று சொல்லலாம்.

சமீப காலத்தில் இந்த யந்திரங்களில் தொழில் நுட்ப முறையில் சில அபிவிருத்திகள் ஏற்பட்டன. இவை மிகவும் பிரபலமடைந்து ஹாலந்து நாட்டின் சின் னமாகவும் விளங்கத் தொடங்கி விட்டன. பொருத்தமான சின்னங்கள் அல்லவா ? அவற்றின உதவியைக் கொண்டு பெரும் பரப்பு நிலத்தைக் கடலிலிருந்து மீட்டிருக்கிருர் கள். பல்வேறு தொழில்கள் இதன் உதவி கொண்டு இயங்குகின்றன. கடந்த காலத்தில் டச்சு மக்கள் பல் வேறு நாடுகளில் குடியேறினர் தட்ப வெப்பமும் மற்ற வையும் வசதியாக இருந்த இடங்களில் எல்லாம் உடனே காற்ருடி யந்திரங்களே நிறுவி விட்டார்கள். நியூயார்க், நியூ அம்ஸ்டர்டாம் முதலிய நகரங்களின் மிகப் பழைய படங்களில் மரத்தாலான காற்ருடி யந்திரங்கள் இருப் பதைக் காணலாம், என்றும் இதுபோன்ற காலனிப் பகு திகளில் அவை புறக்கணிக்கப்பெற்றன; இறுதியாக கை விடவும் பட்டன. தாய் நாட்டில் மட்டும், பெருமளவில். இன்றும் பழங்காலத்துக் காவல் வீரர்களேப் போல நின்று நிலவுகின்றன.

இரண்டாவது உலக யுத்தத்தில், மொத்தக் காற்றூடி யந்திரங்களில் பதினொரு சதவிகிதம் பாழ்பட்டன. பெரும்பாலானவை, பீரங்கி அல்லது விமானத் தாக்குதலுக்குப் பலியாயின, மேலும் பலவற்றை, ஜர்மன் படை வீரர்கள், நேச தேசத் துருப்புக்களால் துரத்தப்பட்டு ஹாலந்தை விட்டு வெளியேறிய போது, அழித்து விட்டுப் போனார்கள்.

சேதமுற்ற காற்றூடி யந்திரங்கள் யாரும் இப்போது சீர்படுத்தப் பெற்று விட்டன. முற்றிலும் சேதமுற்றவைகளுக்குப் பதிலாகப் புதியவை தோன்றியிருக்கின்றன. நிலத்திலிருந்து தண்ணீர் இறைப்பதற்காக 700-ம் தொழிலியலில் ஈடுபட்டுள்ள 1,050-ம் (இவற்றில் பெரும் பகுதி மாவு அரைப்பவை) என மொத்தம் 1,750 காற்றூடி யந்திரங்கள் இப்போது ஹாலந்தில் இருக்கின்றன. இவற்றில் 1,300 நல்ல நிலையில் இருந்து செயலாற்றுகின்றன.

காற்றூடி யந்திரம் அழகு மிகுந்த உருவமாகவும் தோன்றுகிறது. தேவைக்குப் பயன்படும் வகையில் அமைந்த அதன் அடி, முடி, விசிறி ஆகிய அனைத்துமே அழகுருவாய்த் திகழ்கின்றன. ரம்ப்ராண்டுக்கும் அவர் போன்ற பிற உயர்ந்த கலைஞர்களுக்கும் கற்பனையூட்டும் ஒன்றாகக் காற்றூடி யந்திரம் திகழ்ந்திருக்கிறது.

கப ஜுரத்திற்குப் புது மருந்து

டாக்டர் வில்லியம் தாம்ஸன்

இங்கிலாந்தில் எலும்புருக்கி புற்றுநோய் முதலியவற்றைவிடக் கப ஜுரத்தால் ஏற்படும் சாவே அதிகம் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இதனால் நாட்டுக்கு, ஆண்டுஒன்றுக்கு நோயுற்றோருக்கு சிகிச்சை படிச்செலவு உற்பத்திக் குறைவு என பல காரணங்களால்—சுமார் எண்பது கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுவதாக புள்ளித் தொகுப்பாளர்கள் கூறுகிறார்கள்.

குளிர்ப் பிரதேச நாடுகளில், பனிக் காலத்தில் கப ஜுரம், சாதாரணமாகக் காணப்படுகிறது. தொழில்வளமுள்ள நாடுகளில், தொழிற்சாலைப் புகையினால் காற்றுக் கெடுவதால் கப ஜுரத்தின் வேகம் அதிகரிக்கிறது. பிரிட்டனில் 100,000 பேர்களில் 63 பேர்களை இந்த நோய் தாக்குகிறது. கிராம மக்களைவிட, நகர மக்களே இந்த நோய்க்கு அதிக அளவில் பலியாகிறார்கள்.

இங்கிலாந்திலுள்ள தொழிற்சாலைகள், கரியையும் எண்ணெயையும் எரிப்பதால், ஆண்டு ஒன்றுக்கு இருபது லட்சம் டன் கரிப்புகையையும், ஐம்பது லட்சம் டன் கந்தகப் புகையையும் கக்கி வானை அசுத்தப்படுகின்றன. புகையின் அளவைக் குறைக்க முடிந்தால்— ஓரளவுக்கு சுவாசிக்க நல்லகாற்று கிடைக்கும். தொழிற்சாலைப்புகையினால் ஏற்படும் கேட்டை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது அண்மையில் பார்லிமென்டில் 'கிளின் ஏர் ஆக்டு' என்றோர் சட்டமும் நிவைவேற்றப்பெற்றது, புதிய தொழிற்சாலை

களை நிறுவும் நாடுகள், தொழிற்சாலைப் புகையினால் ஏற்படும் கேட்டைத் தவிர்ப்பதுபற்றிச் சிந்தித்தல் அவசியம்.

காற்றுடன் தூசியும் நுரையீரலையடைந்து தொல்லை தருகிறது. இருமல் தோன்றுகிறது. மார்ச்சளி இருக்கும் போது, தூசி மூச்சுக் குழலில் படிந்து விடுகிறது. மூச்சுக் குழலில் உள்ள தசைகள் இயங்க முடியாதபடி கபம் கட்டிவிடும், அதைத் தொடர்ந்து காய்ச்சல் வரும் கபத்தைக் கரைக்க மருந்து கொடுத்தால்தான் நிவாரணமேற்படும். பாறைபோலக் கபம் இருகிவிட்டால், அதை இளக்குவது எளிதல்ல. பெங்கர்ஸ் லாபரடரீஸ் என்ற பிரிட்டிஷ் நிறுவனத்தைச் சேர்ந்த நிபுணர்கள், கைமோடிரிப்ஸின், ஐஸபிரினலின் என இரண்டு வகை மருந்துகளைத் தயாரித்திருப்பதுடன் அவற்றை உபயோகிக்க தனிவகை உறிஞ்சுகுழல்—டிஸ்பெர்ஸர்—ஒன்றையும் தயாரித்திருக்கிறார்கள். இவற்றின் துகள்கள் முகபூச்சுப் பொடியைவிட சன்னமாகயிருப்பதால், உறிஞ்சும்போது எளிதில் மூச்சுக் குழலை எட்டிவிடுகின்றன.

இவற்றைச் சிலருக்குக் கொடுத்துப் பார்த்ததில் பத்தில் ஏழு பேர்களுக்கு குணமேற்பட்டது. இந்த மருந்துகள் ஜுரத்தை முறிக்கக் கூடியவையல்ல. ஆனால் கபத்தை முறிக்கக்கூடியவை கபம் கட்டுவதால்தான் தொல்லைகள் ஏற்படுகின்றன. ஆகவே முதன்நிலையில் கபத்தை கரைக்கும் முயற்சி எடுத்துக்கொள்ளப் பெற்றது. அடுத்த முயற்சி நோயை வெல்லும் முயற்சியாக இருக்கும்.

மக்களாட்சியும் தொழிலாளர் இயக்கமும்

தொழிலாளர் கண்ணோட்டம்

[மக்களாட்சியில் தொழிலாளர் இயக்கம் ஊன்றி வளர்ந்து வருகிறது. பிரிட்டிஷ் தொழிற்சங்கக் காங்கிரஸின் உதவிச் செயலாளர் விக்டர் பெதர் இந்தக் கட்டுரையில் தொழிலாளர் நிலையை விளக்குகிறார்.]

பிரிட்டனில் தொழிலாளர் இயக்கம்தோன்றிச் சுமார் இருநூறு ஆண்டுகளாகின்றன. தொழிற் சங்கங்கள் காலத்திற்கேற்ற முறையில் வளர்ச்சி பெற்றிருக்கின்றன. அவற்றின் நோக்கமும் பணியும் விரிவடைந்திருக்கின்றன.

சுமார் 90 ஆண்டுகளுக்கு முன்பு தொழிற் சங்கக் காங்கிரஸ் நிறுவப் பெற்றது. இன்று தொழிற் சங்கக் காங்கிரஸில் 185 யூனியன்கள் இணைந்து பணியாற்றுகின்றன. இவற்றின் உறுப்பினர் எண்ணிக்கை 85 லட்சம். நாட்டிலுள்ள ஒவ்வோர் தொழிலைச் சேர்ந்த சங்கமும் தொழிற் சங்கக் காங்கிரஸுடன் இணைந்து பணியாற்றி வருகிறது. தொழிலாளர் சங்கங்கள் சுதந்திரமாக இயங்குகின்றன. ஒவ்வோர் சங்கமும் உறுப்பினர்களுடைய விருப்பத்திற்கேற்ப கொள்கைகளை அமைத்துக் கொண்டு, அவர்கள் அவ்வப்போது செய்யும் முடிவுகளுக்கிணங்கச் செயலாற்றுகிறது. தொழிற் சங்கக் காங்கிரஸ் இயக்கத்தின் மாபெரும் சக்தியாக விளங்கினாலும் ஆணையிடும் நிறுவனமாக இயங்கவில்லை. இணைந்துள்ள சங்கங்களுக்குக் குறிப்பிட்ட துறைகளில் சிபாரிசுகளைக் கூறி அவற்றை நிறைவேற்ற முயலுகிறது. பல்லாண்டுகளாக ஏற்பட்ட பழக்கத்தின் காரணமாக, தொழிலாளர் சங்கங்

கள் தொழிற் சங்கக் காங்கிரஸின் சிபாரிசுகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கின்றன. தொழிலாளர்கள் தன்னடக்கத்துடனும் மிகு தொகையாளர் தீர்ப்புக்கு அடங்கி நடக்க வேண்டும் என்ற எண்ணத்துடனும் செயலாற்றுவதால் பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கத்தில் ஜனநாயகப் பண்பு மிளிருகிறது.

பல ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய சிறு சங்கங்களில் சில இன்று பிரமிக்கும் முறையில் வளர்ச்சி பெற்றுள. உதாரணமாக டிரான்ஸ்போர்ட் அண்டு ஜனரல் ஒர்க்கர்ஸ் யூனியனில் பன்னிரண்டரை லட்சம் உறுப்பினர்கள் உண்டு. ஒரு தொழில் விரிவடையும்போது தொழிலாளர் சங்கமும் விரிவடைகிறது. அதனுடைய பணியும் விரிவடைகிறது. தொழிலாளர் இயக்கம் தொழிலாளர்களுடைய நலனைக் காப்பதுடன் அவர்களுடைய பண்பாடு—சமூக நிலையையும் உயர்த்துகிறது.

ஒரே தொழிலைச் சேர்ந்த பல சங்கங்கள் ஐக்கிய பலத்தை விரும்பி ஒன்றாக இணைந்தபோது சிக்கல்கள் தோன்றின என்றாலும் பயனும் கிடைத்தது. சிறு சங்கங்கள் தன்னிச்சையாக இணைந்ததால் பணியும் பலமும் பெருகிற்று. சங்கங்களின் உரிமையை மதித்து ஜனநாயக முறையில் நடவடிக்கைகள் அமைந்தன. இல்லாவிட்டால் தொழிலாளர் நலனைப் பேணுவதற்காகத் தோன்றிய தொழிற் சங்க இயக்கம், நிலை தவறி ஓர் வியாபாரக் கூட்டமாக மாறியிருக்கும். தொழிற்சங்க இயக்கத்தில் உறுப்பினர்கள் அனைவருக்கும் சம உரிமை உண்டு. கிளைச் சங்கம் முதல் தேசீய மகாநாடு வரையில் ஒவ்வோர் குழுவிலும் உறுப்பினர்களுக்கு தங்களுடைய உரிமைகளைப் பயன்படுத்தும் வாய்ப்புக் கிடைக்கிறது.

ஸ்தல ஸ்தாபனங்களிலும் பாராளு மன்றத்திலும் மக்கள் பிரதிநிதிகள் அமருவதற்கு நெடுங்காலத்திற்கு முன்னேயே தொழிற் சங்கங்கள் ஜனநாயக முறையில் செயலாற்றத் தொடங்கிவிட்டன. தொழிற்சங்க இயக்கம், குடியாட்சி முறைக்கு ஓர் பயிற்சிக்களமாக அமைந்தது. தொழிற்சங்க இயக்கத்தில் தீவிரப் பங்கு எடுத்துக்கொண்ட பலர் ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் பாராளு மன்றத்திற்கும் சென்று சிறப்புப் பணியாற்றினர்கள்—பணியாற்றுகிறார்கள். நாட்டிலுள்ள பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களும் தொழிற் சங்கங்களில் அங்கம் வகிப்பதால் ஜனநாயக முறைகளை நன்கு தெரிந்து கொண்டு செயலாற்றுகிறார்கள்.

கூட்டத்தில் வாக்கெடுப்பு மூலம் முடிவுகளைச் செய்வதும் விவாதத்தில் பங்கெடுத்துக் கொள்ள அனைவருக்கும் சமவாய்ப்பளிப்பதும் ஒழுக்க விதிகளைப் பேணி நடப்பதும், நாட்டின் அரசாங்கத்தைத் தேர்ந்தெடுப்பதும்—குடியாட்சி முறையல்ல. நிறைவுற்ற குடியாட்சி முறையைக் காண இவை துணை செய்கின்றன. குடியாட்சி முறைக்கு விளக்கம் கூறுவது எளிதல்ல. குடியாட்சி முறைக்கு ஒழுக்கமும் நேர்மையும் பிறர் கருத்துக்கு மதிப்பளிக்கும் பண்பும் அவசியம். குடியாட்சி முறையில் மக்கள் அனைவருக்கும் சம உரிமையுண்டு. மிகு தொகையாளர் விருப்பப்படி ஓர் பிரச்னைக்குத் தீர்வு செய்தாலும் அந்தப் பிரச்னைமீது கருத்துக்கூறி சபையின் ஆதரவைப் பெறும் வாய்ப்பை சிறு தொகையாளருக்குத் தருவது குடியாட்சி முறையின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும். குடியாட்சி முறையில் ஒவ்வொருவருக்கும் பேச்சுரிமை யுண்டு. குழுவாகச் சேர்ந்து செயலாற்றும் உரிமை யுண்டு. ஒவ்வொருவரும் நேர்மையுடனும் நீதியுடனும் பிறர்நலம் பேணியும் சுதந்திரமாக வாழும் உரிமையை குடியாட்சி முறை அளிக்கிறது.

பிரிட்டிஷ் தொழில்களில் ஜனநாயக நடைமுறை வேரூன்றிவிட்டது. தொழிலாளர்கள் உரிமைகளைக் கோரும்போது, கூடிப்பேசி முடிவு செய்து கொண்டே செயலில் இறங்குகிறார்கள். தொழிலாளர்கள் சங்கம் அமைத்துக் கொண்டு செயலாற்றுவது போல தொழிலதிபர்களும் தங்களுடைய நலன்களுக்காகச் சங்கம் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தொழில் தகராறுகள் தோன்றும்போது தொழிலாளர் பிரதிநிதிகள், தொழிற்சாலைப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசித் தீர்வுகாண முயலுவதுண்டு. இம்மாதிரிச் சந்திப்புக்களில் சம்பிரதாயத்தை ஒதுக்கிவிட்டு இரு சாராரும் மனம் விட்டுப் பேசுவார்கள். சமரசம் செய்து வைக்க மூன்றும் மனிதரைத் தேடாமல் நேரடியாகப் பேசி முடிவுக்கு வரும் நிகழ்ச்சிகளும் உண்டு. சமரச உடன்படிக்கை செய்துகொண்ட பிறகு—அது சட்டபூர்வமாகத் தங்களைக் கட்டுப்படுத்தாது என்றாலும்கூட—இரு சாராரும் அதை நிறைவேற்ற முயலுவார்களே தவிர மீறத் துணிய மாட்டார்கள்.

ஜனநாயக முறைகளை ஏற்றதால் பிரிட்டனில் தொழிற்சங்க இயக்கம் செல்வாக்கும் பலமும் பெற்று விளங்குகிறது. தொழில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. தொழிற் சங்கத் தலைவர்கள், தொழிலாளர் நலனை மட்டும் கருதாமல் தொழில் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு நேர்மையுடனும் பொறுப்புடனும் சிக்கலை ஆராய்ந்து தங்களுடைய கோரிக்கையை சமர்ப்பிப்பார்கள். தொழில் செழித்தால்தான் தொழிலாளர்களும் வாழ முடியும். ஆகவே ஊதிய உயர்வு அல்லது வேறு சலுகைகளைக் கோரும்போது, தொழிற் சங்கப் பிரதிநிதிகள் தொழிற் சாலையின் நிலைமையையும் உற்

143831 JL M211,N44KM N59.16.10

பத்தி— ஏற்றுமதி—லாபம் முதலிய அம்சங்களையும் ஆராய்வதுண்டு.

புதிய தொழில்கள் தோன்றியுள்ள இந்நாளில் தொழிற் சங்கத் தலைவர்களுடைய பொறுப்பும் அதிகரித்து விட்டது பிரிட்டிஷ் தொழிற்சாலைகளில், திறமை—உற்பத்தி பெருக்கத்திற்கான திட்டமிடும்போதும் புதிய உத்தியோக முறைகளில் பயிற்சிதர தொழிலாளர்களைத் தேர்ந்தெடுக்கும்போதும், நிர்வாகிகளும் அரசாங்க அதிகாரிகளும் தொழிற்சங்கத் தலைவர்களும் கலந்தாலோசிக்கிறார்கள். தொழில்துறை ஆராய்ச்சிப் பணியிலும், விஞ்ஞான ரீதியில் அபிவிருத்தி காணும் முயற்சியிலும், தொழிற்சங்கங்கள், தொழிற்சாலை நிர்வாகத்திற்கு துணை நிற்கின்றன தொழில் நுட்பக் கல்விக் குழுக்களில் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் பணியாற்றுகிறார்கள்.

தொழிற் சங்கங்கள் உறுப்பினர்களுடைய பொருளாதார நலனில் அக்கறை காட்டுவதைப் போல அவர்களுடைய உடல்நலனைக் காப்பதிலும் அக்கறை காட்டுகின்றன. தொழிற் சாலையில் சுகாதார வசதிகளை அதிகரிப்பதிலும் விபத்துக்களைத் தடுக்க நூதன முறைகளை வகுப்பதிலும் தொழிற் சங்கங்கள் தீவிரப் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றன. தொழிலாளர்களுக்கு வசதிகளை வழங்கும் பொறுப்பு தங்களையே சேர்ந்தது என்று கூறும் நிர்வாகிகள் இப்போது இல்லை. தொழிற்சாலையிலுள்ள ஒவ்வொரு நடைமுறைக் குழுவிலும் நிர்வாகிகளும் தொழிலாளர்களும் இடம் பெற்றுப் பணியாற்றுகிறார்கள்.

மகத்தான தியாகம் செய்ததன் விளைவாக இன்று தொழிற்சங்க இயக்கம் சீரும் செல்வாக்கும் பெற்றிருக்கிறது. உரிமைப் போராட்டத்தில் குதித்த தொழி

லாளர்கள் பட்ட துயரம் பல. வேலை இழந்தோர் பலர். சிறை சென்றோர் பலர். நாடு கடத்தப்பட்டவர் பலர். ஒரு காலத்தில் தொழிற் சங்க உறுப்பினர்களுக்கு வேலை மறுக்கும் நிலை இருந்தது. உறுப்பினர் அடையாள அட்டை வைத்திருப்போரை வேலையிலிருந்து நீக்கி விடுவார்கள். வேறு தொழிற்சாலைகளிலும் வேலை கிடைக்காது.

காலம் மாறிவிட்டது. இன்று நிர்வாகச் சிக்கல்களை அகற்றுவது பற்றி ஆலோசிக்க நிர்வாகிகள் தொழிலாளர்களை—தொழிற் சங்கத் தலைவர்களை—அழைக்கிறார்கள். தொழிற்சங்க இயக்கத்தை மதிக்காதவர்களே பிரிட்டனில் இல்லை என்று கூறலாம். தொழிற் சங்கங்களும், தொழிலதிபர்கள் சங்கங்களும் சுதந்திரமாகச் செயலாற்றுகின்றன என்றாலும் பல துறைகளில் இணக்கமாகவும் ஒன்றையொன்று கலந்தாலோசித்தும் செயலாற்றுகின்றன. பிரிட்டனில் நிலவும் தொழிலுறவு கண்டு வெளிநாட்டார் வியப்படைகிறார்கள். ஒவ்வொரு நிலையிலும் இரு சாராரும் ஜனநாயகப் பண்புடன் செயலாற்றுவதால்தான் தொழில் துறையில் அமைதியும் நல்லுறவும் நீடிக்கின்றன. இதனால் பிரிட்டனில் மனநிறைவற்ற தொழிலாளர்கள் இல்லை என்று கூறவில்லை. தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதுண்டு. நல்லுறவால் கிடைக்கும் பயனுடன் ஒப்பிட்டால் நட்டம் மிகமிகக் குறைவு என்று தெரியும். உதாரணமாக 1958-ஆம் ஆண்டில் நடந்த வேலை நிறுத்தங்களால் ஏற்பட்ட நஷ்டத்தை எடுத்துக் கொள்வோம். சராசரியாக வாரம் ஒன்றுக்கு 72 செகண்டுகள்தான் நபர் உழைப்பு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் விபத்துக்களால் ஏற்பட்ட உற்பத்தி நஷ்டம் இதைப் போல ஐந்து மடங்காகும். தொழிலாளர்கள் நோயுற்றதால் ஏற்பட்ட உற்பத்தி நஷ்டம், இதைப்போல எண்பது மடங்காகும்.

ஜனநாயக முறையின் சிறப்பையறிய தொழிற் துறையில் நிலவும் அமைதியை அளவுகோலாகக் கொள்ள வேண்டியதில்லை. ஆனால் அது ஓர் சிறந்த சாதனையாகும். பிரிட்டிஷ் மக்கள், பல்லாண்டுகளாகப் போராடிப் பெற்ற உரிமைகளை, பேணி வளர்க்கிறார்கள். தங்களுடைய உரிமைக்கு ஊறு செய்யும் எந்த முயற்சியையும் அவர்கள் எதிர்ப்பார்கள். பிரிட்டனில் ஜனநாயக முறையில் வாழ்க்கை அமைவதற்கு தொழிற்சங்க இயக்கம், குறிப்பிடத்தக்க முறையில் உதவியிருக்கிறது.

நிர்வாகிகள் கண்ணோட்டம்

[நேஷனல் பெடரேஷன் ஆவ் பில்டிங் டிரேட்ஸ் எம்பிளாயர்ஸ் என்ற ஸ்தாபனத்தில் பிரதான தொழிற்துறை அதிகாரியாகப் பணியாற்றும் எனஸ்டு ஜோன்ஸ், இந்தக் சட்டுரையில் நிர்வாகிகள் நிலையை விளக்குகிறார்.]

சுதந்திரமும், கல்வி அறிவும், செய்திகளைச் சீர்தூக்கிப் பார்த்து ஏற்கும் திறனும் படைத்த மக்கள் வாழும் நாட்டில் ஜனநாயக முறை வெற்றி பெறும். அங்கு கொடுங்கோன்மையோ, மக்கள் வெறியாட்சியோ தலை தூக்காது. ஜனநாயகம் தழைப்பதற்கு, கொள்கை இலட்சியங்களைத் தருக்க ரீதியில் சிந்தித்துச் செயலாற்றும் தலைவர்களும் அவசியம். தலைவர்களுக்கும் சமுதாயத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதும் அவசியம்.

பிரிட்டனில் ஜனநாயகமுறையைச் சிறப்பாகச் செயலாற்றுவதற்கான வாய்ப்புகள் உண்டு. அரசியலிலுள்ள ஜனநாயக உத்தி முறைகளுக்கும் தொழிலுறவிலுள்ள ஜனநாயக உத்தி முறைகளுக்கும் வித்தியாசமுண்டு. தொழிலுறவில் பிரத்யட்ச நிலைக்கு முதலிடம் தரப்படுகிறது. தொழிலாளர்கள் அல்லது தொழிலதிபர்கள் மகா

நாடுகளில் நிறைவேற்றப் பெறும் தீர்மானங்களைப் பற்றி எவரும் சிந்திப்பதில்லை. தீர்மானங்களைச் செயலாற்ற முனையும்போதுதான் அக்கறை ஏற்படுகிறது.

இடையூறு இல்லாமல் தொழில் (உற்பத்தி) நடக்க வேண்டும் என்பதே முதலாளிகளுடைய நோக்கம். இந்த நோக்கம் வெற்றி பெற வேண்டும் என்பதற்காகவே தொழிலாளர் நலத் துறைக்கு பணம் செலவிடப் பெறுகிறது என்றும் கூறலாம்.

தொழிலாளர்களில் பலர்—அரசியல் சித்தாந்தங்களைப் பற்றி தீவிரமாகச் சிந்திக்காமல்—நல்ல சூழ்நிலையில் கைநிறையச் சம்பாதிகக வேணடும் என்ற ஆசையுள்ளவராக இருக்கிறார்கள். ஜனநாயகமுள்ள நாட்டில் வாழும் தொழிலாளர்கள், தங்களுடைய ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள தொழிற்சங்க வழிகளைக் கையாளுகிறார்கள். தொடக்க நிலையில், தொழிலாளர்கள், வேலை நிறுத்த முறையையே வெற்றிக்கான முறை எனக் கருதினார்கள். முன்னேற்றமேற்பட சமரசமாகப் பேசி நன்மைகளைப் பெற முடியும் என்பதைத் தெரிந்து கொண்டார்கள்.

பிரிட்டிஷ் தொழிற்சங்க இயக்கத்தில் சென்ற முப்பதாண்டுகளில், சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. சங்கங்களை தொழிற்சாலை முதலாளிகள் ஏற்காத—மதிக்காத—காலம் மறைந்துவிட்டது. தொழிலாளர்களுடைய குறைகளும் கணிசமான அளவில் மாறிவிட்டன. அதனால் வழக்குகளே இல்லாமல் ஒழிந்து விட்டதாகக் கூறுவதற்கில்லை. கீழ் வரிசையிலுள்ள சிலா பொறுப்பற்ற தன்மையில் நடந்து கொள்வதால், இங்குமங்கும் சிக்கல்கள் தோன்றுவதுண்டு. ஆனால் காலம் மாறிவிட்டது.

தொழில்நுட்ப முன்னேற்றத்தால் உற்பத்தி உத்திமுறைகளும் மாறி வருகின்றன. பொறுப்புள்ள தொழிற்சங்கத் தலைவர்கள், நீண்ட கால நன்மைகளைக் கருதி தொழிலும் தொழிலாளர்களும் பயனடையும் முறையில் செயலாற்றுகிறார்கள்.

சென்ற சில ஆண்டுகளில் பிரிட்டிஷ் முதலாளிகளுடைய மனப்பான்மையும் மாறியிருக்கிறது. இரண்டாம் உலகப் போருக்கு முன்பும் போர்க் காலத்திலும் தொழிலாளர் இயக்கம் வலுவடைந்ததாலும் அனைவருக்கும் வேலை வாய்ப்புக் கிடைத்தாலுமேற்பட்ட விளைவுகளே இந்த மாறுதலுக்குக் காரணம். முதலாளிகள்—குறிப்பாக பெரிய தொழிற்சாலை அதிபர்களில் பலர்—தொழில் வளம் காண திறமைப் பெருக்கமும் பயிற்சி வசதியும் தேவை என்ற நவீனக் கருத்தை ஏற்றுக்கொண்டு செயலாற்றுகிறார்கள். ஆனால் இன்றுங்கூட தொழிற்சங்க இயக்கத்தை விரும்பாத முதலாளிகளும் பழி தீர்க்கும் குணமுடைய தொழிலாளர் தலைவர்களும் இருக்கத்தான் இருக்கிறார்கள். கூலியைக் குறைப்பதைவிட, திறமையைப் பெருக்குவதால் லாபமுண்டு என்ற கருத்தைப் பொதுவாக அனைவரும் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள்.

கட்டிடத் தொழிலில் (இதில் சுமார் பத்து லட்சம் பேர் பணியாற்றுகிறார்கள்) முதலாளிகளின் நலனைக் காக்கும் தொழிலுறவு அதிகாரியாகவும் நேஷனல் ஜாயின்ட் அட்வைசரி கௌன்சிலின் உறுப்பினராகவும் பணியாற்றும் எனக்கு தொழிற்சங்க இயக்கவளர்ச்சியின் பல்வேறு நிலைகளில் பங்கெடுத்துக் கொள்ளும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. சென்ற சில ஆண்டுகளில், தொழில் நல்லுறவு வளர்ச்சிக்காக நிறுவப்பட்ட தேசீயக் கௌன்சிலும், வட்டாரச் சபைகளும் நிலைபெற்றுப் பணியாற்றுவ

தில் அக்கறை காட்டி வருகின்றன. இவை தொடக்க நிலையில் ஊதியம், உழைப்பு நேரம் முதலியவை சம்பந்த மான சிக்கல்களையே ஆராய்ந்தன என்றாலும் பிறகு, உற்பத்திப்பெருக்கம், பயிற்சி வசதி, ஊதியத்துடன் விடு முறை வழங்கவும் பருவ நிலையால் இழக்கும் நேரத்தை ஈடுகட்டவும் திட்டம் வகுத்தல்—என இவை போன்ற விஷயங்களில் கவனம் செலுத்தலாயின. தொழிலாளர் களும் முதலாளிகளும் நேருக்நேர் சந்தித்ததால் பல சிக் கல்களை பேசித் தீர்த்துக் கொள்ள முடிந்தது. சமரச உணர்ச்சி வளர்ந்ததால் தொழிலில் அமைதியும் நீண்ட காலப் பிரச்னைகளைப் பற்றிச் சிந்திகக வாய்ப்பும் கிடைத்தது.

போர்க் காலத்திலும போர்ப் பிற்காலத்திலும் ஊதிய நிர்ணயம் செய்ய முடியாத நிலை இருந்ததால் முத லாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் பெருத்தசோதனை ஏற்பட்டது என்றே கூறலாம். அனைவருக்கும் வேலை கிடைத்து ஆள்ப் பஞ்சமேற்பட்டதால் இயக்க பலத்தி னால் அதிகக் கூலி கோரும் வாய்ப்பு எழுந்தது. நுகர் வோர் நலனையும் நிதி வசதியையும் நாட்டு நிலைமையை யும் மனத்தில் கொண்டு உற்பத்தியிலீடுபடும் பொறுப்பு முதலாளிகளுக்கு இருந்தது. நிலைமையை புதிய கோணத்திலிருந்து ஆராயும் அவசியமேற்பட்டது. புதிய உத்திகளையும் முறைகளையும் கையாள வேண்டியதா யிற்று. கட்டிடத் தொழில் சம்பந்தப்பட்டமட்டில் தொழிற் தலைவர்களும் தொழிலாளர் தலைவர்களும் அடிக்கடி சந்தித்து மனம் விட்டுப் பேசியதால் பல சிக் கல்களுக்கு விடை காண முடிந்தது.

நிர்வாகிகளும் தொழிலாளர்களும் கூட்டுறவுடன் செயலாற்றத் தொடங்கியதால் வேறு பல தொழில்களி

லும் நல்ல பயனேற்பட்டது. நல்லுறவுக்கு அடிப்படை யிடுவதுதான் கஷ்டம். பொறுமையுடனும் சகிப்புத்தன் மையுடனும் முயற்சியைத் தொடங்கி விட்டால் வேற்று மையும் சந்தேகமும் மறைந்து உறவு வளரும். நல்லெண் ணமும் உறவும் வளர்ந்தால் உழைப்பு விதிகளில் குறை கள் இருந்தாலும் அவற்றைப் பாராட்டாமல் செயலாற் றும் மனப்பான்மை ஏற்பட்டுவிடும். நல்லெண்ணமும் உறவும் இல்லா விட்டால் சிறந்த முறையில் வகுக்கப் பெற்ற உழைப்பு விதிகளில்கூட குறைகண்டு குரோதம் பாராட்டத் தோன்றும்.

சென்ற சில ஆண்டுகளில் பிரிட்டிஷ் தொழிற்சாலை களில்—ஒவ்வோர் துறையிலும் தன்னியங்கி யந்திரங்களை அமைப்பதால்—புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டிருக் கிறது. புதிய உத்தி முறைகளைத் தெரிந்து கொள்வதற் காக தொழிலாளர்களும் மேஸ்திரிகளும் பயிற்சி பெற வேண்டியிருக்கிறது. கல்வியறிவும், தொழிற் பயிற்சியும் இருந்தால்தான் புதிய சூழ்நிலையில் பணியாற்ற முடியும் என்பதை தொழிலாளர்கள் தெரிந்து கொண்டிருக்கிறார் கள். தொழிலாளர்களுக்கு கல்வியும் பயிற்சியுமளிப்ப தில் தொழிற் சங்கக் காங்கிரஸும் பிற நிறுவனங்களும் தனிக் கவனம் செலுத்தி வருகின்றன.

தொழிற்றுறையில் நல்லுறவு நிலவ வேண்டுமென்ப தில் அரசாங்கத்துக்கும் அக்கறையுண்டு. ஆனல் அரசாங் கம் நேரடியாகத் தலையிடாமல், ஆலோசனைக்குழு (நேஷ னல் ஜாயின்ட் அட்வைசரி கௌன்சில்) ஒன்றை நிறுவி இயன்ற உதவிகளைச் செய்து வருகிறது. இந்த ஆலோ சனைக் குழுவில் பிரிட்டிஷ் தொழிலதிபர்கள் சம்மேள னத்தின் பிரதிநிதிகளும் தொழிற்சங்கக் காங்கிரஸ் பிரதி

நிதிகளும் தேசியத்தொழில்களின் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கிறார்கள்.

தொழிற் பிரதிநிதிகளும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் கூடி ஆலோசிக்கும் முறை பிரபலமடைந்து வருகிறது என்றாலும், ஒரு சிலருடைய பொறுப்பற்ற செயலால் இங்குமங்கும் எதிர்ப்புத் தோன்றுவதுமுண்டு. ஆனால் இதைக் குறையாகக் கொள்ளக்கூடாது. முதலாளிகள், தொழிலாளிகளுடைய அறிவுக்கும் பொறுப்புக்கும் மதிப்புக் கொடுத்தால், தொழிலாளர்கள் அந்த மதிப்பைக் காப்பாற்றிக் கொள்ள முயலுவார்கள். இரு சாராரும் கூடி உழைத்தால்தான் வெற்றியும் லாபமும் கிடைக்கும் என்பதை நிர்வாகிகளும் தொழிலாளிகளும் உறுதியுடன் நம்பி உழைக்க வேண்டும். தொழிலில் நல்லுறவு ஏற்பட்டு விட்டால் தன்னலவாதிகளுடைய சூழ்ச்சிகள் தோற்றுவிடும்.

அமெரிக்கப் பெண்கள்

செயலில் ஈடுபட்டு உழைப்பது அமெரிக்கப் பெண்களின் இயல்பு; செயல் புரிவதே அமெரிக்க மனப்பான்மை, இவை இரண்டும் அமெரிக்க வாழ்க்கையின் தனிச் சூழ்நிலையில் சிறந்து விளங்கின. எனவே, அமெரிக்கப் பெண்கள் தனிப் பண்புடையவர்களாக விளங்குகின்றனர்.

மற்ற நாடுகளிலுள்ள பெண்களைவிட அமெரிக்கப் பெண்கள் பல்வேறு முயற்சிகளில் அதிகமாக ஈடுபட்டு உழைத்து வருகிறார்கள். மற்ற நாடுகளிலுள்ள பெண்கள் தேசீய வாழ்க்கையின் சில துறைகளில் அதிகமாக ஈடுபடலாம்; ஆயினும், அமெரிக்கப் பெண்கள் மற்றவர்கள் செய்யும் பணிகளைவிட மிகவும் அதிகமான பணிகளைச் செய்கிறார்கள்.

அமெரிக்காவில் முதலில் குடியேறிய காலத்தில் ஆண்களோடு பெண்களும் சேர்ந்து உழைக்க வேண்டியதாயிற்று; அக்காலத்திலேயே சமத்துவ நிலை ஏற்பட்டது. ஆண்களும் பெண்களும் சேர்ந்தே புதிய நாட்டை உருவாக்கினார்கள். ஆண்களின் கூட்டாளிகளாகப் பெண்கள் விளங்கினார்களேயன்றி, தாழ்ந்தவர்களாகவும் அடிமைகளாகவும் அவர்கள் இருக்கவில்லை. எனவே, இன்று அமெரிக்கப் பெண்களுக்கு இருக்கும் சமத்துவம் தொன்று தொட்டு அவர்கள் பெற்ற செல்வமாகும்.

எவ்வளவு சுதந்திரம் இருந்தாலும், அமெரிக்கப்பெண்கள் மற்ற நாடுகளிலுள்ள பெண்களைப் போலவே குடும்பத்திலும் தங்கள் கடமைகளைச் செய்கிறார்கள். அதுவே இன்னும் அவர்களது முக்கிய பணி.

அரசாங்க அலுவல் பார்க்கும் பெண்கள் தொகை அமெரிக்காவில் மிகவும் கூடியுள்ளது; அவர்கள் பல் வகைப் பதவிகளும் வகிக்கிறார்கள். வீட்டுப் பணி, நாட்டுப் பணி ஆகிய இருவகைப் பணிகளையும் அமெரிக்கப் பெண்கள் செய்கிறார்கள். தொழில்நுட்பத் துறையிலும் ஆட்சித் துறையிலும், கொள்கை வகுக்கும் துறையிலும், உள்நாட்டில் பெரும்பதவி வகிக்கிறார்கள். வெளிநாடுகளில் அமெரிக்க அரசாங்கத்தின் பிரதிநிதிகளாகவும், சர்வதேச ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளாகவும் பதவி வகிக்கிறார்கள்.

1916-ஆம் ஆண்டில் அமெரிக்க காங்கிரஸுக்கு (சட்டசபை) முதல் பெண் பிரதிநிதி தேர்ந்தெடுக்கப் பெற்றார். அது முதல் 66 பெண்கள் காங்கிரஸ் உறுப்பினராக இருந்திருக்கிறார்கள். தற்பொழுது 14 ஸ்டேட்டுகளைச் சேர்ந்த 17 பெண்கள் காங்கிரஸில் உறுப்பினராக இருக்கிறார்கள்.

மத்திய அரசாங்கத்தில் குமஸ்தா முதலிய வேலை செய்வோரில் பெண்கள் சுமார் நான்கில் ஒரு பகுதி.

நகர சபைகளில் சுமார் முப்பதாயிரம் பெண்கள் பல் வகைப் பணிகள் செய்கிறார்கள்.

வெளி விவகார இலாகாக் காரியதரிசி, கணக்குத் தணிக்கையாளர் பொதுக் கல்வி மேற்பார்வையாளர், வாணிபம் ஆட்சித் துறைத் தலைமைப் பதவி முதலிய பதவிகளில் எல்லாம் பெண்கள் அமர்ந்திருக்கிறார்கள்.

அமெரிக்கத் தலைமை நீதிமன்ற நீதிபதி பதவி ஒன்று தவிர நீதித் துறையில் மற்றப் பதவிகளையெல்லாம் பெண்கள் வகித்திருக்கிறார்கள்.

பால் கெடாது காக்க

உங்களூர் கடையில் பிரிட்டனிலிருந்து தருவிக்கப் பட்ட 'கறந்தபால்' கிடைக்கும் என்று கூறினல் நீங்கள் நம்புவீர்களா? நம்பமுடியாத இந்தச் செய்தி நடைமுறைக்கு வரும்நாள் அண்மையில்தான் இருக்கிறது. ரீடிங் (இங்கிலாந்து) கிலுள்ள தேசீய பால் பண்ணை ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த டாக்டர் டபிள்யூ. ஜி. வேர்மௌத் பல மாதங்கள் வரையில் கெடாமல், பாலை சேமிக்கும் முறை ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிருர். இந்த முறையில் சேமிக்கப்பட்ட பாலை, மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய பிரிட்டன் திட்டமிட்டிருக்கிறது.

காய்ச்சித் தூய்மைப்படுத்திய பாலில் சில நிமிஷங்களுக்கு சிற்றலை ஒலியை வீசிவிட்டு புட்டியிலடைத்து குளிரவைத்தால், அது பல மாதங்கள் வரையில் கெடாமல் இருக்குமாம். பாலைக் கெட்டியாகும் வரையில் குளிர வைத்து டப்பிகளிலடைக்கலாம். இந்த முறையினுல், பாலின்சுவையும் குணமும் மாறுவதில்லை. 10oF நிலையில் சேமித்து வைத்தால், பதினெட்டு மாதங்கள் வரையில் பாலின் தூய்மை கெடாதாம்.

பிரிட்டனில் குளிரவைத்த பாலை விற்பனை செய்கிருர் கள். அதை காப்பி அல்லது தேயிலைப் பானத்துடன் கலக்கும்போது, வெண்ணெய் பிரிந்து மிதிக்கும். வேர் மௌத் முறையில் குளிரவைக்கப்பட்ட பாலில் இப்படி வெண்ணெய் பிரியாதாம். உடன் கறந்தபாலைப்போலவே சுவையும் குணமுமுள்ளதாக இருக்குமாம்.

குணமும் சுவையும் கெடாமல் பாலைப் பக்குவம்செய்யும் முறையைக் கண்டுபிடிப்பதில் பல நாட்டு விஞ்ஞானிகள் ஈடுபட்டிருக்கிறார்கள். முதலில் வெற்றி பெறும் வாய்ப்பு பிரிட்டிஷ் விஞ்ஞானிக்குக் கிடைத்து விட்டது. புது முறையில் சேமிக்கப்பெற்ற பாலை—சுமார் எழுநூறு பைன்டுகள்—மத்திய கிழக்கிலுள்ள பல நாடுகளுக்கு, சோதனைக்காக அனுப்பினார்கள். அங்குள்ள வைத்திய அதிகாரிகள் புட்டியிலடைத்த பாலுக்கும் கறந்த பாலுக்கும் வேற்றுமை காணமுடியவில்லை என்று கூறினார்கள். இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் கப்பற்போக்குவரத்து நடத்தும் ஓர் நிறுவனம், தனது கப்பல்களில் புதுமுறைச் சேமிப்பு பாலை உபயோகிக்கிறது.

நிஸின்

சுவையும் மணமும் குணமும் கெடாமல் உணவுப் பண்டங்களைச் சேமித்துவைக்க ‘நிஸின்’ என்ற பொருள் உதவுகிறது. “மருந்து உற்பத்தித் துறையில் பெனிஸிலின் ஓர் புரட்சியை ஏற்படுத்தியதுபோல உணவுப் பண்டங்கள் தயாரிப்புத் துறையில் நிஸினும் புரட்சியை உண்டாக்கும்” என்று அல்பின் அண்டு பாரட் லிமிடெட் என்ற பிரிட்டிஷ் நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பிரிவுத் தலைவர் எச்.பி. ஹாலி தம்மைப் பேட்டிகண்ட நிருபரிடம் கூறினார். இந்த நிறுவனம் வியாபார ரீதியில் ‘நிஸின்’ தயாரிக்க திட்டமிட்டிருக்கிறது.

சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு நியூஸிலாந்து விஞ்ஞானிகள் ‘நிஸினின்’ குணத்தையும் பயனையும் கண்டறிந்தார்கள். ஆல்பின் அண்டு பாரட் நிறுவனத்தின் விஞ்ஞானிகள், அதை வியாபார ரீதியில் தயாரித்து உபயோகிப்பதற்காக சென்ற சில ஆண்டுகளாக சோதனைகளை நடத்தி வந்தார்கள்.

சுமார் ஆயிரம் டன்கள் பாலைக் கடைந்தால் ஓர் அவுன்ஸ் ‘நிஸின்’ கிடைக்கிறது. உணவுப் பண்டங்களை நீண்டகாலம் கெடாமல் காக்க இதை மிகச் சிறிய அளவில் சேர்த்தால் போதும். ஒரு டன் உணவுப் பண்டங்களுக்கு மூன்றரை அவுன்ஸ் நிஸின் போதும் என்று தெரிகிறது.

காற்றுப்பட்டால் உணவுப் பண்டங்கள் கெட்டுவிடும். அதனால் காற்றுப் புகாத டப்பிகளில் உணவுப் பண்டங்களைச் சேமித்து வைக்கிறார்கள். இந்த முறை

யில் உணவைக் கெடாமல் காக்க முடியும் என்றாலும் சில குறைகளும் உண்டு. வெப்பத்தின் உதவியால் டப்பிகளை இறுக்கி மூடுவதால் வைடமின் சத்துக்கள் முறிந்து விடுவதுடன் உணவின் நிறமும் சுவையும் மணமும் மாறிவிடுகின்றன. 'நிஸின்' கலந்த உணவுப் பொருள்கள் வெப்பந் தாங்கக்கூடியவை. ஆகையால் சத்துப் பொருள்களும் குணமும் மணமும் மாறுதலடைவதில்லை.

" உஷ்ணப் பிரதேச நாடுகளில் சிலவகை டப்பி உணவுகள் பாக்டிரியா கிருமிகள் தோன்றுவதால் கெட்டு விடுகின்றன. நிஸினைச் சேர்ப்பதால் பாக்டிரியா கிருமிகளால் ஏற்படக்கூடிய கெடுதலைத் தடுத்துவிடமுடியும் " என்று ஹாலி கூறுகிறார்.

எனது மனம்

பங்கிம் சந்திரர்

எனது மனம் எங்கே போய்விட்டது? அதனை யார் எடுத்துச் சென்றார்கள்? அது இருந்த இடத்தில் காணேமே; ஹா! என் மனத்தை இழந்து விட்டேன்! நானும் எப்படி எப்படியெல்லாமோ தேடிப் பார்த்தேன். கண்டு பிடிக்க முடியவில்லையே! பின் யார்தான் அதனைத் திருடிக் கொண்டு போயிருப்பார்கள்?

"சமையலறையில் தேடிப்பார் அப்பா! அங்கு இருக்கலாம் உன் மனம்" என்று ஒரு நண்பர் கூறினர். அறுசுவை உணவுகள் பல விதங்களிலே தயாரித்து வைக்கப் பட்டிருக்கும் சமையலறையில் இருக்கத்தான் வேண்டும். ஆகவே, அங்கே சென்று தேடிப் பார்த்தேன். பலனில்லை. இன்னும் பற்பல பழங்கள் வைக்கப் பெற்றிருக்கும் உக்கிராண அறையிலும் தேடிப் பார்த்தேன். நான் வீணில் அலைந்ததுதான் மிச்சம். இவ்வுலகில் என் மனம் ஓர் இடத்திலும் இல்லை என்பதை இப்பொழுதுதான் புரிந்து கொண்டேன்.

உண்மையைக் கூறுகிறேன். ஒன்றிலுமே என் மனம் செல்கிறதில்லை. உடலைச் சுகமாக வைத்துக் கொள்வதிலோ—தனிமையிலிருந்து சிந்தனையின்பம் அனுபவிப்பதிலோ—அல்லது அரிய பெரிய புத்தகங்களைப் படித்து இன்பம் பெறுவதிலோ என் மனம் செல்கிறதில்லை. பொருள் தேடுவதில்? அதை அப்போதும் மனம் நாடவில்லை; இப்போதும் நாடவில்லை. எங்கும் ஏன் மனமில்லை?

இளகிய தன்மையுடையவர்கள் மனத்தைக் கட்டுப் படுத்துவது அவசியம் என்பதை அறிவேன். இல்லேயேல் அது பறந்துவிடும்! நானே ஒரு பொழுதும், ஒரு விதத்தி லும் என் மனத்தைக் கட்டுப்படுத்தவில்லே. ஆம். இவ் வுலகில் நாம் எதற்காக வருகிறேம்? சரியாகச் சொல்ல முடியாது. ஆனல் நான் சொல்லுவது மனத்தைக் கட்டுப் படுத்துவதற்கே என்று.

நான் என்றென்றும் என்னவனே. பிறனுடையவன் அல்லன். இக்காரணத்தாலே உலகில் எனக்குச் சுக மில்லே—இன்பமில்லே. உலகில் தம்மிடத்தில் உண்மை யிலே அன்பு வைத்துத் தம்மை ஆதரித்து வருபவர்கள் எல்லோரும், மணம் செய்து கொண்டு மக்களேப் பெற்று அவர்களேயும் ஆதரித்து வருகின்றனர்; பின்னர் தாமும் அவர்களிடமே தஞ்சம் அடைந்து விடுகின்றனர்! அவ் விதம் செய்யாவிடில் அவர்கள் சுகமடைவது எங்ஙனம்? சிறிதும் சுகமுடையவராகார். ஆதலால் பிறருக்காகத் தன்னேயே தியாகம் செய்து கொள்வதை விடச் சிறந்த இன்பம் வேறென்றுமில்லே. இதுவே நான் தீவிரமாகச் சிந்தனே செய்து கண்டு கொண்ட உண்மையாகும்.

சரி: பணம், புகழ், உல்லாச வாழ்க்கை மூலமாகச் சுகம் முதலிய இன்பங்கள் இருக்கின்றன. இவை முன்னே கூறப் பெற்றதைப் போலச் சிறந்தவை அல்ல. நிலேயானவை அல்ல. முதன் முதலில் இவை எவ்வள வுக்கு இன்பம் தரக்கூடியவையாக இருந்தனவோ அவ் வளவுக்கு இரண்டாம் தடவையில் ஒருபொழுதும் இரா. மூன்றும் தடவையிலோ—இரண்டாம் தடவையை விடக் குறைந்த இன்பமே கொடுக்கும் இவ்விதமே வரவரக் குறைந்து கொண்டே வந்து, கடைசியில் கொஞ்சம் கூட இன்பம் இல்லாமலே போய் விடும்! ஆனல் அதன் விளே

வாக இரண்டு துன்ப காரணங்கள் உண்டாகின்றன. பொருள், மறைந்திருக்கும் காரணத்தால் சுகம் இல்லாமல் போகட்டும்; அது கிடைப்பதரிது என்பதனுலே அதிக மாகத் துன்பம் உண்டாகிறது. இன்னும், அதிருப்தி மயமான பேராசை வளர்வதனுல் அடையப் பெறும் துன்பம் அனந்தம்.

உலகில் எவையெல்லாம் காமப் பொருள்கள் என்று அனுதி காலமாகவே அறிந்து கொள்ளப் பெற்றிருக்கின்றனவோ, அவை அனைத்தும் அதிருப்தியையும் துன்பத்தையும் தரக்கூடியவை—துன்பத்துக்குக் காரணங்களுமாகும். உதாரணங்கள் சிலவற்றைக் கவனிப்போம். புகழைப் பின்தொடர்வது இகழ், காமத்தைத் தொடர்வது நோய், பண லாபத்தோடு நஷ்டமும் பின் செல்லுகிறது; மனத் துயரையும் மிகத் தருகிறது. இளமையும் வலிமையும் கொண்ட உடல் கிழடு தட்டுகிறது; நோய் நொடி கண்டு வலிமையை இழந்து விடுகிறது. நற்பெயருக்கும் களங்கம் வந்து விடுகிறது. ஆகவே, மானம் என்னும் மட்டு மரியாதை யெல்லாம் சரத் காலத்துக்குப்பின் மேகக்கூட்டம் போல எங்கோ மறைந்து விடுகின்றன.

கல்வி, முற்றும் கற்றுக் கொண்டாகிவிட்டது என்று திருப்தி அடைந்துவிடக் கூடியது அல்ல. கடலளவு கொண்டது அது. ஆகவே கற்றது வெறும் இருளிலிருந்து காரிருளுக்குள்ளேயே ஒருவனை இட்டுச் செல்கிறது. இவ்வுலகில் தத்துவ விசாரம் அவனைக் குணமடையச் செய்கிறதில்லை.

சொந்தப் பிரயோசனம் காரணமாகக் கல்வி ஒரு பொழுதும் சக்தி அற்றுப் போவதில்லை. ஏராளமாகப் பணத்தைத் தேடிச் சேமித்து வருபவன் சுகமாய் இருக்கிருன? அல்லது பேரும் புகழும் கொண்டிருப்பவன் தான்

சுகத்தோடிருக்கிருனு? இல்லை, ஒருவனும் இல்லை. செல்வம்—புகழ் என்னும் ஆசைகள் அவற்றின் பயனின்மையைத் தீர்மானமாகப் புலப்படுத்தியும்கூட மனிதன் மட்டும் அவற்றிற்காக உயிரைவிடத் தயங்குகிறதில்லை.

குழந்தை, தன் தாயிடம் பால் குடிக்கும்போதிருந்தே, செல்வமும் புகழும் சாரம் நிறைந்தவை என்னும் நம்பிக்கை கொண்டு விடுகிறது. இரவு பகலாகத் தாய், தந்தை, சகோதரன், சகோதரி, குரு, இன்னும் உறவினர்கள், அண்டை அயலார், பகைவன், நண்பன் முதலானோர் "ஆ! பணம்! புகழ்! மரியாதை! பயம்" என்று இவ்விதம் அடிக்கடி சொல்லுவதையும் கேட்டு, அவர்கள் செய்கைகளையும் பார்த்துப் பார்த்து, அப்படியே அவை குழந்தையின் இதயத்தில் ஆழ்ந்து பதிந்து விடுகின்றன. நிலையான சுகத்தின், நிரந்தரமான இன்பத்தின் பிறப்பிடம் (மூலம்) எதிலிருக்கிறது என்பதை மனிதன் என்றுதான் சிந்தனை செய்து பார்க்கப் போகிருனே?

பண்டிதன், அறிஞன், ஞானி, விஞ்ஞானி, வாழ்க்கை வேதாந்தி இவர்கள் அனைவரும் ஒரு கூட்டம் கூடி இவ்விஷயத்தை நன்கு விவாதித்துப் பார்க்கட்டும்.

மனிதனின் உலக வாழ்வு பிறர் சுகத்தைப் பெருக்குவதைத் தவிர வேறென்றிற்கும் இல்லை என்று உலகறியச் சொல்லுவேன்.

இப்பொழுது மனிதன் எவ்விதம் செல்வம், புகழ், மரியாதை, போகங்கள் இவற்றில் ஒவ்வொரு கணமும் வெறிபிடித்து அலைகிருனே அவ்விதமே பிறர் சுகத்தைப் பெருக்குவதில் ஒவ்வொருவனும் வெறிகொண்டு தொழில் செய்ய ஒருநாள் முன்வரவே போகிருன்.

நான் இறந்து சாம்பலாகி விடுவேன். இந்த நம்பிக்கையோடு எத்துணை நாட்கள் இருந்து வரப் போகிறேன்.

இப்பொழுது, நாடு ஏன், உலகமே புறச் செல்வச் செழுமையில் கண்ணுக இருந்து வருகிறது என்று கூறலாம். பணமே பக்தி! பணமே முக்தி! பணமே புத்தி பணமே கதி! இன்னும் தருமம் பொருள், இன்பம், வீடு இவையனைத்தும் பணமே! அவ்வழிச் செல்லாதே; நாட்டின் செல்வம் குறைந்துவிடும். இவ்வழியில் செல்; செல்வம் கூடும். எவ்வெவ் வழியின் மூலமாய்ப் பணத்தைப் பெருக்க முடியுமோ, அவ்வவ் வழியிலே பணத்தைப் பெருக்க முயலுவாய். ஆகாயத்திலிருந்து அப்படியே பணமழை பொழிந்து கொட்டட்டும். பாரத நாடெங்கும் ஓரே பண மயமாக இருக்கட்டும் ஏ மனமே! ஆன்மீக வளர்ச்சியிலே உனது அறிவு அணுவளவும் செல்கிறதில்லையே!

மனமாவது மண்ணாங்கட்டியாவது! அந்த மனம் வேறு! பணமின்றி மனமேது? சரி, புறச் செல்வச் செழுமையைப் பூசனை செய்து வா. "வேண்டாம், கூடாது" என்று நான் கூறவில்லை. ஓரளவு வேண்டியதே, நல்லது. இவ்வளர்ச்சியின் காரணமாக, மரியாதையற்றவர்கள் எத்தனை பேர் மரியாதையுற்றவர்களாக மாறியிருக்கின்றனர்? எத்தனை கண்ணியமில்லாதவர்கள் கண்ணியமுள்ளவர்களாகி யிருக்கின்றனர்? எத்தனை ஒழுக்கமற்றவர்கள் ஒழுக்கமுள்ளவர்களாகி இருக்கின்றனர்? அதருமமுடையவர்களாக இருந்து தருமமுடையவர்களாக மாறியிருப்பவர்கள் எத்தனை? தீச்செயல் புரிபவர்கள் எத்தனை பேர் நன்மை செய்பவர்களாக ஆகியுள்ளனர்? மாசுமிகுந்தவர்கள் எத்தனை பேர் புனிதர்களாகி யிருக்கின்றனர்? மருந்துக்குக்கூட ஒருவர் இல்லை. வேண்டாம், வேண்

டாம் இப்பேர்ப்பட்ட வளர்ச்சி எனக்கு வேண்டவே வேண்டாம்.

பின், வேண்டுவது என்ன? மனமாற்றம். எதனைக் குறித்து? ஆன்மீகச் செல்வச் செழுமையைக் குறித்தே.

பணம் படுத்தும் பாடுகளைக் கண்ணுறக் காண்கிறோம். பயம், பகைமை, பொறாமை, வெறுப்பு முதலிய எத்தனையோ தீப் பயன்களைத் தந்து, மனித ஜாதியின் ஒற்றுமையை, அன்பை, இன்பத்தை அடியோடு குலைத்து வருவதை நேரில் பார்க்கிறோம்.

"பொருள் இல்லாதார்க்கு இவ்வுலகமில்லை. அருள் இல்லாதார்க்கு அவ்வுலகமில்லை" என்பதும் ஒரு பழமொழி. இதில் கூறப்படும் "பொருள்" பணம் அன்று. பிறர் நலத்திற்காகத் தேடும் பொருள். பிறர் சுகத்திற்காகத் தேடும் பொருள். பிறர் வாழ்வதற்கான பொருள். அப்பொருளே மெய்ப்பொருள். ஆன்மீகப் பொருள். அப்பொருள் கிடைத்து விட்டால், பின் அருளைத் தானாகவே அடையலாம். அருளை அடையின் அவ்வுலகு கிடைக்கும்.

உலகத்தின் தென்கோடி

தென் துருவக் கண்டம் இன்னும் நன்கு ஆராய்ந்து அறியாத கண்டம். பனி உறைந்து பரந்து கிடக்கும் இதனைப் "பனிப் பாலை" எனலாம்; உலகத்தின் குளிர் காலங்களை உருவாக்கும் தொழிற்சாலை எனலாம்; அக்கண்டத்தில் எங்கெங்கே மலைகள் உள்ளன என்றும், மண்ணுக்குள்ளிருந்து என்னென்ன பொருள் கள் கிடைக்;க்கூடும் என்றும், கண்டத்தை ஒட்டிய கட லில் வாழும் உயிரினங்கள் என்னென்ன என்றும் இன் னும் சரிவரத் தெரியவில்லை.

உலகத்தின் தென்கோடியில் மர்மமாக இருக்கும் இப்பகுதியை ஆராயச் சென்ற விஞ்ஞானிகள் பலர். ஆயினும் இப்பொழுதுதான் உலக நாடுகள் எல்லாம் இவ் வாராய்ச்சியில் ஒருமித்து இறங்கின; சர்வதேச பூ பௌ திக ஆண்டு ஆராய்ச்சி இது

ஆராய்ச்சி வெளிப்படுத்திய அதிசயங்கள் பல. தென் துருவக் கண்டத்தில் வேனிற் காலமாக இருக்கும் போது உலகத்தின் வேறெந்த இடத்தையும்விட அதிகம் வெயில் அடிக்கும் இடம் தென் துருவமே. எனினும் அது உலகத்திலெல்லாம் குளிர் மிக்க இடங்களில் ஒன்றாக விளங்குகிறது. ஏனெனில், அடிக்கும் வெயிலில் நூற் றுக்கு 95 பங்கு அங்குள்ள பனிக்கட்டிப் பாறையில் பட்டு விண்ணுக்கே திரும்பி விடுகிறது.

தென் துருவக் கடலில் உள்ள பனிக்கட்டி முன்பு நினைத்ததுக்கும் அதிகம். விஞ்ஞானிகள் கணக்கிட்டிருந்

ததற்கு நாற்பது சதவிகிதம் அதிகமாகவே அங்கு பனிக் கட்டி இருக்கிறதெனத் தெரிய வந்துள்ளது. 14,000 அடி திண்ணமுள்ள பனிக்கட்டி ஒன்றையும் ஆராயச்சி அறிஞர்கள் அங்கே கண்டுள்ளனர்.

புதிய பள்ளத்தாக்கு

ஆங்கோர் இடத்தில் கடல் மட்டத்துக்கு 3,500 அடிக்குக் கீழே ஆழமானதோர் பள்ளத்தாக்கு இருப்பதையும் புதியதோர் மலைத் தொடரையும் சர்வதேச பூ பௌதிக ஆண்டில் அமெரிக்க ஆராய்ச்சியாளர் கண்டு பிடித்தனர்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வானத்திலிருந்து பனித் தூளாக விழுந்தது இன்று பனிக்கட்டிக்குக் கீழே ஆயிரம் அடி ஆழத்துக்கும் அப்பால் இறுகிக் கட்டியாக இருப்பதையும் அவர்கள் ஓரிடத்தில் கண்டு பிடித்தார்கள்.

தென் முனையில் மட்டும் 3000 முறை நில நடுக்கம் ஏற்பட்டதாகவும் கண்டார்கள்.

சர்வதேச பூ பௌதிக ஆண்டுத் தென் துருவ ஆராய்ச்சியில் அமெரிக்கா, ருஷ்யா, பிரிட்டன் முதலிய பன்னிரண்டு நாடுகள் ஒத்துழைத்தன. சர்வதேச ஒத்துழைப்பு இதனினும் சிறந்தோங்கியதில்லை என்றார் ஜனாதிபதி ஐஸன்ஹோவர்.

ஆராய்ச்சி இன்னும் தொடர்ந்து விரிவானமுறையில் நடக்க வேண்டும் என்கிறார் டாக்டர் தாமஸ் ஜோன்ஸ். இவர்தாம் அமெரிக்காவின் தேசிய விஞ்ஞான ஸ்தாபனத்தின் தென் துருவ ஆராய்ச்சித் திட்டத்து நிர்வாகி.

ஏற்கனவே எட்டு விஞ்ஞானிகள் இந்த ஆராய்ச்சிக்காகத் தென் துருவக் கண்டத்துக்குப் புறப்பட்டுப் போய் விட்டார்கள். இன்னும் 74 பேர் இன்னும் சில மாதங்களில் புறப்பட்டு விடுவார்கள். இவர்களில் சுமார் 37 பேர் குளிர் காலத்திலும் அங்கேயே இருந்து ஆராய்வார்கள். தென் துருவக் கண்டத்தில் ஏப்ரல் மாதம் குளிர் காலம் தொடக்கம்.

இப்பொது தொடங்கப் போகும் அமெரிக்கத் தென் துருவ ஆராய்ச்சியில் டென்மார்க், ஜப்பான், நார்வே, தென் ஆப்பிரிக்கா ஆகிய நான்கு நாடுகளின் விஞ்ஞானிகள் நால்வர் கலந்து கொள்கின்றனர்.

குருடர்களுக்கான கண்கள்

ஹேக் நகரில் உள்ள பதிப்பகம் ஒன்று, ஒரு நூல் நிலையத்தையும் வாரப் பத்திரிகை ஒன்றையும் நடத்துகிறது. புத்தகங்களை வெளியிடுவதையும் அது மேற்கொண்டிருக்கிறது. புத்தகங்களை 'பிரெயில்' முறையிலும், நாடாக்களிலும் வெளியிடுகிறது.

ஜி. ஜே. கோல்ப் என்பவரும் அவரது சகோதரியும், 1894-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் குருடர்களுக்கான முதலாவது டச்சு நூல் நிலையத்தைத் துவக்கினார்கள். ஆம்ஸ்டர்டாம் பொது நூல் நிலையமும், மற்றவையும் அவர்களைப் பின்பற்றின. குருடர்களுக்கான பாடப் புத்தகங்களை ஏராளமாகக் கொண்ட ஹேக் நூல் நிலையம் உள் நாட்டிலும், வெளி நாடுகளிலும் பெருந் தொண்டாற்றி வருகிறது.

ஹேக் நூல் நிலையம், தனக்கெனப் புத்தகங்களைச் சேகரிப்பது மட்டுமின்றி, மற்றவர்கள் வெளியிட்ட புத்தகங்களையும் 'பிரெயில்' முறையில் பதிப்பிக்கிறது. 1958-இல் 49,600 பத்திரிகைகள் பிரெயில் முறையில் வெளியிடப்பட்டன. இருநூற்றைம்பது பேர் இந்த வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களில் 157 பேர் குருடர்களுக்கெனப் பிரத்தியேகமாகத் தயாரிக்கப் பெற்ற "பிரெயில்" முறை டைப்ரைட்டரைப் பயன்படுத்தி வேலை செய்தார்கள்.

கோல்ப் ஹேக் நூல் நிலையத்தைத் துவங்கியபோது, "பிரெயில்" புத்தகங்கள் அங்கே மிகவும் குறைவாகவே

இருந்தன. இப்போது அங்கே டச்சு, ஜெர்மன், பிரெஞ்சு, இங்கிலீஷ், ஸ்பானிஷ், எஸ்பரான்டோ மொழிகளில், பிரெயில் முறையில் பதிப்பிக்கப் பெற்ற சுமார் முப்பத்தைந்தாயிரம் நூல்கள் இருக்கின்றன. அதில் நாவல்களும், சமய நூல்களும், விஞ்ஞான நூல்களும் உண்டு. கடந்த ஆண்டில் மட்டும் முப்பத்தோராயிரம் 'பிரெயில்' நூல்களை 700 வாசகர்களுக்கு அந்த நூல் நிலையம் இரவலாக வழங்கியது.

பிறகு பிரெயில் டைப்ரைட்டரும், டேப்-ரிகார்டரும் வந்தன. நெதர்லண்ட்ஸில் சுமார் ஐயாயிரம் பேர் கண்ணிழந்தவர்கள். அவர்கள் அனைவரிடமும் டேப் ரிகார்டர் இல்லை. கண்ணற்றவர்களுக்கான டச்சு ஸ்தாபனத்தில் தொண்டு, அவர்களுக்கென குறைந்த விலையில் அவை விற்கப்படுதல் ஆகியவற்றின் காரணமாக, மேலும் மேலும் பலர் அவற்றை வாங்கி வருகிறார்கள்.

காலத்தோடு ஒட்டி, ஹேக் நூல் நிலையமும், அதிக அளவில் "பேசும் புத்தகங்களை"யே பயன்படுத்துகிறது. ஒலிப்பதிவு செய்யப்படும் பகுதிகளை வாசிப்பவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் வேலையில், நெதர்லண்ட்ஸ் ரேடியோ யூனியன் உறுப்பினர் ஒருவர் ஈடுபட்டிருக்கிறார். அவற்றை—(மறு ஒலி) பதிப்புக்களை—விசேஷ பெட்டிகளில் வாடிக்கைக்காரர்களுக்கு அனுப்புகிறார்கள். இதற்கு, வாசிப்பதில் தேர்ச்சி பெற்றவர்களும், நல்ல சாதனங்களும் தேவை. இதற்கென புதிய ஸ்டூடியோ ஒன்று உருவாகி யிருக்கிறது.

நூற்றுக்கணக்கான மணி நேர வாசிப்பு இதுவரை இந்த ஸ்டூடியோவில் ஒலிப்பதிவாகி யிருக்கிறது. ஹேக் நகரசபை நிரந்தரமாக இந்த வாசிப்புத் தொழிலுக்கென

நியமித்திருக்கிறது. பாடப் புத்தகங்கள், ஒவ்வொரு நாளும் ஐந்து மணி நேரம் ஒலிப்பதிவாகின்றன.

அதே நேரத்தில், டேப்-ரிகார்டர் இல்லாதவர்களுக்கென பிரெயில் முறையில் நூல்களை வெளியிடும் வேலையும் தொடர்ந்து நடைபெறுகிறது.

நெதர்லண்ட்ஸில் உள்ள பார்வையற்றவர்களுக்கென ஒரு வாரப் பத்திரிகை நடத்தப்படுகிறது. அது ஏறக்குறைய ஓராண்டுக் காலமாக இருந்து வருகிறது. ஹேக் நூல் நிலையத்தின் உதவியுடன் அது வெளியாகிறது. சுமார் நூறு சந்தாதரரர்களுடன் தொடங்கிய அந்தப் பத்திரிகைக்கு இப்போது 700 சந்தாதாரர்கள் இருக்கிறார்கள். கண்ணிழந்தவர்களின் நீண்ட காலத் தேவையை இந்தப் பத்திரிகை நிறைவேற்றி வைத்திருக்கிறது.

குருடர்களுக்கான நூல் நிலையங்கள் அனைத்தும் கூட்டாகச் சேர்ந்து, இந்தப் பத்திரிகை வெளியாவதற்கென ஒரு ஸ்தாபனம் நிறுவியிருக்கின்றன. ஒவ்வொரு வாரத்திலும் பத்திரிகைகளில் வெளியான செய்திகளைச் சுருக்கித் தருவதில், நான்கு பத்திரிகையாளர் ஈடுபட்டிருக்கிறார்கள். வானொலியில் ஒலிபரப்பப்பட்ட செய்தியை ஒதுக்கி விடுவார்கள். அந்தப் பத்திரிகை "இரண்டு மணி" நேர "நீள"முடையது. தலைப்புகளைத் தவிர, அச்சடித்த பக்கங்கள் மட்டும் மூன்று. டச்சுப் பத்திரிகைகள், வெளிநாட்டுப் பத்திரிகைகள் ஆகியவற்றில் வெளியான தலையங்கங்களைச் சுருக்கி தருவதற்கென ஒரு "பத்தி" ஒதுக்கப் பெறுகிறது. எல்லாப் பத்திகளும் நிரம்பிய பிறகு, அந்தப் பத்திரிகையில் பணிபுரியும் இரண்டு ஆண்களும் இரண்டு பெண்களும் அவற்றை வாசிக்கிறார்கள். செய்திகளின் தரத்துக்கேற்ப, ஆண்

குரலோ அல்லது பெண் குரலோ அளிக்கப்படுகிறது. டேப்-ரிகார்டரிலிருந்து மறு (ஒலிப்)பதிப்பு பதின்மூன்று டேப் ரிகார்டர்களில் நடைபெறுகிறது. அவை, இதற்கென, ஒரு வாரத்தில் 23 மணி நேரம் வேலை செய்கின்றன.

அந்த வாரப் பத்திரிகை, வெள்ளிக்கிழமையன்று சந்தாதாரர்களுக்கு அனுப்பப்படுகிறது. வார இறுதியில் அவர்கள் அவற்றைக் கேட்க வசதியளிக்கும் வகையில் இதைச் செய்திருக்கிறார்கள். 6 நாட்களுக்குள் அந்த நாடாக்களை, ஹேக்குக்குத் திருப்பி அந்த நாடாக்களிலிருப்பவற்றை அழித்து விட்டு அவற்றை மீண்டும் பத்திரிகையின் அடுத்த 'இதழு'க்கெனப் பயன்படுத்துவார்கள். அந்த வாரப் பத்திரிகையின் வாசகர்கள் ஹாலந்திலும் வெளி நாடுகளிலும் பரவியிருக்கிறார்கள். அவர்கள் உலகின் எல்லாத் தரப்புகளையும் சேர்ந்தவர்கள்.

கண்ணிழந்தவர்களுக்கான ஹேக் நூல் நிலையத்தின் டைரக்டரும் ஒரு குருடர். அவருக்குக் கீழ் பணிபுரியும் ஒன்பது பேரில் பலர் கண் தெரியாதவர்கள். சாதாரணமான, மற்ற நூல் நிலையங்களைப் போலவே, இதற்கும் அரசாங்கம் நிதியுதவியளிக்கிறது. இவற்றையெல்லாம் நடத்துவதற்குப் பணம் தேவை. பிரெயில் காகிதம், நாடாக்கள், மிஷின்கள் ஆகியவற்றை அவர்கள் வாங்க வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் ஹேக் நூல் நிலையம், ஏற்கெனவே விரிந்துள்ள இந்த வேலையை மேலும் பலவிடங்களில் பரப்பும்.

அழகு

நிலக்கோட்டை சங்கரசுப்பு

பண்டைக் காலத்திலிருந்தே அழகைப் பற்றிய ஆராய்ச்சியில் பல நாட்டுத் தத்துவ ஞானிகளும், உள நூல் வல்லாரும் ஈடுபட்டு ஒரு முடிவு காண முடியாமல் அவரவருக்குத் தோன்றிய கருத்துக்களைக் கூறிப் போயிருக்கிறார்கள்!

ஒரு பொருளைப் பார்த்து அது அழகான பொருள் என்று நாம் எண்ணும்பொழுது, அது அனைவருக்குமே அழகிய பொருளாகத் தோன்றும் என நினைக்கிறோம். அதே நேரத்தில் அந்தப் பொருள் இயற்கையா? செயற்கையா? என்ற எண்ணமும் தோன்றுவதில்லை; அது பயன்படக்கூடிய பொருளா? என்ற நினைவும் எழுவதில்லை. இவைகளே அழகின் தனிக் குணங்களாக— சிறப்புப் பண்புகளாகக் கருதப் பெறுகின்றன.

அழகைப் பற்றி மனித சமுதாயம் எந்த அளவு உணர்ந்திருக்கிறது? திரு. வி. க. தாம் எழுதியுள்ள முருகன் அல்லது அழகு என்னும் நூலில் "அழகைப் பற்றி எண்ணாத இடமில்லை; பேசாத இடமில்லை; போற்றாத இடமில்லை. அழகின் மாட்டு உலகங் கொண்டுள்ள பற்றுப் போல வேறெதன் மாட்டும் அஃது அப் பற்றுக் கொண்டில்லை. 'அழகு அழகு' என்றே உலகம் அழகில் உறைந்து நிற்கிறது. இவ்வாறு அழகுடன் வாழும் உலகை நோக்கி, 'அழகு எப்படி இருக்கிறது' என்று வினவின், அதைச் சொல்லால் சொல்ல இயலாது அது விழிக்கிறது. புலன்களுக்கும் பொருளாகாத ஒன்றைப்

பற்றி என்ன சொல்லுவது? என்னே அழகின் நுட்பம்!" என்று கூறுகிறார்.

இந்த வேளையில் நத்தமிழ் நாட்டு அறிஞர் ஒருவர் சொன்னது நினைவுக்கு வருகிறது. 'அழகு என்பது இயற்கையோடு ஒட்டியது; செயற்கையினின்று விலகி நிற்பது; கால எல்லையைக் கடந்து ஒளிர்வது; மனிதனிடத்தில் உள்ள சிறந்த பண்புகளைத் தூண்டிவிடுவது இவற்றையே அழகுக்கு இலக்கணமாக அவர் கூறினார்.

'அழகு எது என்று நிர்ணயிக்கும் சக்தி பார்க்கிறவன் கண்ணில்தான் இருக்கிறது; 'லைலாவின் அழகைக் காண மஜ்னுவின் கண்கள் வேண்டும்' என்று பாரசீகப் பழமொழி ஒன்றும் வழங்கி வருகிறது. நம் தமிழ் நாட்டிலும் கேள்விப்பட்டிருப்போம் 'காட்சியிலே இல்லை அது; கண்களிலே உள்ளதடா' என்று இளங் கவிஞர் ஒருவர் பாடியதாக! அமெரிக்க ஞானி எமர்சன் கூறினார், 'அழகை ரசிப்பது அவரவர்கள் உள்ளத்தின் தன்மையைப் பொருத்தது அழகினால் உண்டாவதே கலை' என்று கலை மிளிரும் அழகுப் பொருட்களை 'இன்ப ஊற்று'க்களாகக் காணுகிறார் கவி கீட்ஸ்.

பிரெஞ்சு நாவலாசிரியர் விக்டர் ஹ்யூகோ, ஒரு பொருள் அழகாயிருக்கிறதென்று கருதினால் மட்டும் போதாது அது பயனுடைய பொருளாகவும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அதை அழகான பொருள் என்று ஏற்றுக கொள்ளலாம் என்கிறார். 'பயன்படக் கூடிய எப்பொருளும் அழகுடையதே!' என்று கூறி 'அழகு'க்கு வரம்பு கட்டுகிறார் கிரேக்கத்தின் தலைசிறந்த தத்துவஞானி பிளேட்டோ.

Edited, Printed and Published by A. K. CHETTIAR at Kumari Malar Press, 100, Mowbrays Road, Madras-18

கவுண்டர் & கம்பெனி
(பிரைவேட்) லிமிடெட்

தலைமை ஆபீஸ்:
கூட்ஸ் ஷெட் ரோடு
பொள்ளாச்சி

கிளை ஆபீஸ் & ஷோரூம்
7/69, ஜெயில் ரோடு
கோயமுத்தூர்

கோயமுத்தூர் & நீலகிரி ஜில்லாக்களுக்கு:

டாடா-மெர்சிடெஸ்-பென்ஸ் டீசல் டிரக்,

ராயல் என்பீல்ட் மோட்டார் சைக்கிள்

விற்பனையாளர்கள்.

நா. மகாலிங்கம், B.Sc., A.M.I.E., M.L.A.,

மானேஜிங் டைரக்டர்



முன்னேற்றத்தில் அருஞ்செயல்

முற்போக்கான நாடுகளுக்குப் பல துறைகளில் நம் நாடு பின் தங்கியுள்ளது. துரித முன்னேற்றத்திற்கு உதவுவது நம் ஒவ்வொருவருடைய—தனிப்பட்டவர்கள், ஸ்தாபனங்கள்—பொறுப்பாகும். ஒன்றுபட்டு உழைப்போமாக.

T.V. சுந்தரம் ஐயங்கார் அன் சன்ஸ்
பிரைவேட் லிமிடெட் - மதுரை.

இதர T.V.S. ஸ்தாபனங்கள் : மதராஸ் ஆட்டோ சர்வீஸ் பி. லிட்., சதர்ன் ரோட்வேஸ் பி. லிட்., சுந்தரம் மோட்டார்ஸ் பி. லிட்., சுந்தரம் இண்டஸட்ரீஸ் பி. லிட்., மதராஸ் மோட்டார் இன்ஸ்யூரன்ஸ கம்பெனி லிட்., சுந்தரம் பினான்ஸ் பி. லிட்., இந்தியா மோட்டார் பார்டஸ அன் அசெஸரீஸ பி. லிட்., சுந்தரம்ஸ் பி. லிட்.,